


ஹனுமார் பக்திபரவசத்தால் விரைவில்
சஞ்சீவி பர்வதங் கொண்டுவருதல்.

6. யுத்த காண்டம்

ஒன்றே யென்னி லொன்றேயாம் பலவென் றுரைக்கிற் பலவேயாம்; அன்றே யென்னி லன்றேயா மாமே யென்னி லாமேயாம்; இன்றே யென்னி லின்றேயா முளதென் றுரைக்கி லுளதேயாம்; நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங் கென்னோ பிழைப்பம்மா.

வினா 1.—இவ்வாறு ஹநுமார் ஸீதையினிடமிருந்து ஸமாசாரம் கொண்டுவந்ததும், ராமர் என்னென்ன செய்தார்?

விடை.—அவர் ஹநுமாரை உத்தமதூதர் எனப் புகழ்ந்து பேசி, அப்பொழுது வேறுவித ஸாதாரணப் பிரதி யுபகாரம் ஒன்றும் செய்யமுடியாத நிலைமையிலிருந்தமையாலும், அவருக்கு ஹநுமார்மேலிருந்த ப்ரீதி அதிகத்தாலும், அநேக கோடிகாலம் தபஸ் செய்தும் பக்தர்களுக்குக் கிடைத்தற்கரிதான சிறந்த தமது அங்கஸங்கத்தை, அவருக்குக் கொடுக்கலாம் என்று எண்ணி, ராமர் அப்பொழுது ஸகல வாநரர்கள் முன்பாக ஹநுமாரை இறுகத் தழுவிக்கொண்டார். இதனால் ஹநுமாருக்கு மிகுந்த ஸந்தோஷமும் மேன்மையும் உண்டாயின. பின்பு ஹநுமார், ராமரின் வேண்டுகோளின்படி, லங்கையையும் ராவணனது பலத்தையும் வர்ணித்து, தாமும் தம்மைப்போன்ற சில குரங்குகளுமே லங்கையை அழித்து ராவணனைக் கொன்று ஸீதையை மீட்டுவரப்போதும் என்று சொன்னார். இதன் பின்பு ஸமுத்ரத்தை எவ்வாறு தாண்டி, வாநரர்களை லங்கைகொண்டு சேர்ப்பது

வினா 31.—வழியில் குரங்குகள் ஸந்தோஷ அதிகத்தால் என்ன செய்தன? அதனால் என்ன பிரமாதம் விளைந்தது?

விடை.—வழியில் ஸுக்ரீவனுக்கு மிகுந்த ப்ரியமானதாயும், ததிமுகன் என்ற வாநரத்தலைவனால் காக்கப்பட்டதாயுமுள்ள மதுவநத்தைக் குரங்குகள் காண, அதில் தேன் குடிக்கவேண்டும் என்று எல்லாக் குரங்குகளும் இறங்கின: ததிமுகனிடம் உத்தரவுபெற்றுக் கொண்டு உள்ளேசென்று, எல்லாக் குரங்குகளும் தேனை வெகு ஸந்தோஷத்தோடு குடிக்கத் தலைப்பட்டன. உடனே மதுவால், மயக்கமுண்டாகக் குரங்குகள் அந்த வநத்தையே அழிக்கத் தொடங்கின. ததிமுகனது வேலைக்காரர் முதலிலும், பின்பு ததிமுகன் நேராகவும், இக்குரங்குகளைத் தடுக்கப்பார்க்க, முடியாது தத்தளிக்க, ததிமுன் ஓடோடியும்போய் ஸுக்ரீவனுக்கு ஸமாசாரத்தைத் தெரிவித்தான்.

வினா 32.—அப்பொழுது ஸுக்ரீவன் என்ன செய்தான்?

விடை.—அங்கதன் முதலிய வாநரர்கள் மதுவநத்தை அழிக்கும் ஸங்கதியை ராமரிடம் சொல்லி, அவர்கள் அவச்யம் ஸீதையைக் கண்டே வந்திருக்கவேண்டும்; இல்லாவிடில், தான் குறித்த நாள்தவறி, அவர்கள் தன்னிடம் வரவேமாட்டார்கள் என்றும், அவ்வாறு வரினும், இம்மாதிரியாய் மதுவநத்தை உத்ஸாகத்தோடு அழித்துத் தேனைக் குடிக்கமாட்டார்கள் என்றும் எடுத்துக்காட்டி, ஸுக்ரீவன் ராமரைத் தேற்றினான். இதன்பின்பு அங்கதன் முதலியோரைச் சீக்ரம்

தன்னிடம் அனுப்பும்படி ஸுக்ரீவன் உத்தரவு கொடுத்து, ததிமுகனை வெகு ஸந்தோஷத்தோடு அனுப்பினான்.

வினா 33.—ததிமுகன் என்ன செய்தான்? பின்பு அங்கதன் முதலியோர் என்ன செய்தார்கள்?

விடை.—ததிமுகன் ஓடிவந்து அங்கதனிடம் ஸுக்ரீவ ஆஞ்ஞையை வெளியிட, அங்கதனுக்கு வானரர்கள் செய்த கார்யம் ஸுக்ரீவனை எட்டிவிட்டதே என்ற எண்ணத்தால் பயமும் வெட்கமும் உண்டாயின. உடனே எல்லாக் குரங்குகளையும் ஸுக்ரீவனிடம் செல்லத் தயாராகும்படி அவன் உத்தரவு செய்தான். எல்லோரும் அங்கதனையும் ஹநுமாரையும் முன்னிட்டுக்கொண்டு, மிகுந்த கோலாஹலத்தோடும் அட்டஹாஸத்தோடும் ராமலக்ஷ்மண ஸுக்ரீவர்கள் இருக்குமிடம், 'கண்டோம் ஸீதையை' என்று கூவிக் கொண்டு வந்து குதித்தனர்.

வினா 34.—இந்த க்ஷேம ஸமாசாரத்தைச் சொல்லியதும், ஹநுமார் என்ன செய்தார்?

விடை.—ராமருக்கு அவர், ஸீதை கொடுத்தனுப்பிய சூடாமணியைக் கொடுத்தார். அதை ராமர் வாங்கித் தமது மார்பில் அணிந்துகொண்டு, கொஞ்ச நாழிகை பெருமூச்செறிந்துவிட்டு, ஸீதை சொல்லியனுப்பித்த அடையாளங்கள், ஸங்கதிகள், ஸீதை இருக்கும் ஹீனநிலை முதலியவைகளை, ஹநுமார் சொல்லக் கேட்டு, அவர் துக்கத்தை அடைந்தார். அதன் பின்பு தான் ஸீதையைத் தேற்றிவிட்டு, கூடிய சீக்ரத்தில் ராமனை வானர ஸேனைகளோடு லங்கைக்கு அழைத்து

வந்து, அவளை அவரே மீட்கும்படி செய்வதாக வாக்களித்து அவளுக்கு ஸந்தோஷம் உண்டாக்கியதையும், ஹநுமார் கடைசியாக ராமருக்குச் சொல்லி தமது கதையை முடித்தார்.

ஸ்ரீமத்

ராமாயண வினாவிடை

(இரண்டாம் பாகம்)



அட்டவணை.

அனுபந்தம்.

என்ற ஏக்கம் ராமர் மனதில் உண்டாக, அவருக்குத் துக்கமுண்டாயிற்று.

வினா 2.—இதை யார் எவ்வாறு தேற்றியது? பின் என்ன நடந்தது?

விடை.—ஸுக்ரீவன் ராமருக்குப் பலவிதமாக ஸமாதாநங்கள் சொல்லித் தேற்றினான். எப்படியாவது ஸமுத்ரத்தின் குறுக்கே அணையிட்டு, வாநரர்கள் லங்கை சேர்ந்தால், லகுவாய் ராவணனைக் கொன்று ஸீதையை மீட்டுவிடலாம் என்றும், ஸமுத்ரத்தைத் தாண்டும் விதத்தை ஸமுத்ரக்கரை போய் யோசித்துக்கொள்ளலாம் என்றும் ஸுக்ரீவன் சொன்னான். உடனே ராமர், வாநரர்களைத் தெற்கு நோக்கிப் புறப்படும்படி ஏவ, ஸுக்ரீவன், முதலில் நீலன் என்ற ஸேனாதிபதியைப் போகும்வழியை முன்னே போய்ச் சீர்திருத்துவதற்கும், கவயன், நளன் முதலிய சில ஸேனாதிபதிகளை ஸேனையின் முன்புறம் போவதற்கும், ஹநுமாரையும் அங்கதனையும் ராமலக்ஷ்மணர்களை முறையே தூக்கிக்கொண்டு மத்தியில் செல்வதற்கும், ஸுஷேணன் (குரங்கு வைத்தியன்) ஜாம்பவான் முதலிய தலைவர்களை ஸேனையின் பின்புறம் காவலாகப் பார்த்து வருவதற்கும் ஏற்படுத்தித் தனது ஸேனைகளை ஸமுத்ரம் நோக்கிப் போகும்படி கட்டளையிட்டான். இந்த ஒழுங்குப்படி ஒன்றாய்ச் சேர்ந்து மிகுந்த கோலாஹலத்தோடு வாநரஸேனை, தென் ஸமுத்ரத்தின் வடகரை வந்து, ராமர் உத்தரவின்படி தண்டிறங்கியது.

வினா 3.—ஸமுத்ரக்கரை வந்ததும் ராமர் என்ன செய்தார்?

விடை.—ராமர், ஸுக்ரீவனுக்கு ஸேனைகளை ஒழுங்குபடுத்தி, கரையில் நிறுத்திவைத்து அவைகளைச் சுற்றிச் சிறந்த வானரவீரர்களைக் காவல்வைத்து மாயாவிகளான ராக்ஷஸர்கள் வந்து சண்டை சச்சரவு செய்யாமல் காப்பாற்றும்படி உத்தரவு கொடுத்தார். அதன் பின்பு லக்ஷ்மணரோடு, ராமர் ஸமுத்ரக்கரையில் ஏகாந்தமாய்ப் போய்க்கொண்டிருக்கையில் அவருக்கு அக்கரையில் ஸீதை படும்பாடு, ஞாபகம் வந்துவிட்டது. அவர் கொஞ்சநாழிகை ஸீதையைப் பற்றி ப்ரலாபிக்க, லக்ஷ்மணரால் தேற்றப்பட்டுத் தைர்யத்தை அடைந்தார். பின்பு ஸமுத்ரக்கரையில் வானராளும் ராமலக்ஷ்மண ஸுக்ரீவர்களும் ஒன்றாய்ச் சேர்ந்து அதைத் தாண்டும் விதத்தை ஆலோசித்துக் கொண்டிருந்தார்கள்.

வின 4.—இந்தத் தருணத்தில் ராவணனிடமிருந்து ராமருக்கு யார் ஸஹாயமாக வந்தது? அவரைப்பற்றி வானரர்கள் என்ன சொன்னார்கள்?

விடை.—ராவணனிடமிருந்து, அவன் தம்பியும் மஹாத்மாவுமாகிய விபீஷணர் நான்கு ராக்ஷஸர்களோடுகூட ராமரை வந்து சரணம் அடைவதற்காக வானரஸேனைக்கு நேர்மேலே வந்து ஆகாயத்தில் நின்றார். அவர் வந்ததும், சில வானரர்களிடம் தம்மைப் பற்றியும் தாம் சரணமடைய வந்திருப்பதைப்பற்றியும் ராமருக்குச் சொல்லியனுப்பினார். இதைக்கேட்டதும் ராமர் வானரச்ரேஷ்டர்களை மந்த்ராலோசனை ஸபையாகக்கூட்டி, விபீஷணரை என்னசெய்வது என்பதைப்பற்றி ஆலோசிக்கலானார். ஸுக்ரீவன் உள்பட எல்லாக் குரங்குகளும் 'அவன் ராக்ஷஸன், நமக்கு

விரோதி, அவனைச் சேர்த்துக்கொள்ளாது கொல்லு வதே நலம்' என்று தமது அபிப்ராயங்களை வெளி யிட்டன. ஹநுமார் மாத்திரம் விபீஷணாது குணத்தை லங்கையில் கண்டிருந்தபடி ஆகையால், 'அவரைக் கெட்டவரென்று சொல்லலாகாது. அவர் தமது அபிப் ராயத்தை வாய்விட்டுச் சொல்லாதிருக்கையில், அவரை நாம் கெட்டவர் என்று எவ்வாறு சொல்வது ? ஆகை யால் அவரை வருத்தாது அவர் வந்த காரணத்தை அவர் வாயாலேயே தெரிந்துகொள்வோம். அவர் முகம் முதலியவைகளை நோக்கினால், நல்ல புத்தியோடு மனப்பூர்வமாய்ச் சரணமடைய வந்திருப்பவர்களைப் போலக் காணப்படுகிறார். ஆகையால் அவருக்கு அபய ப்ரதானம் செய்வதே நலம்' என்று தமது அபிப் ராயத்தை வெளியிட்டார்.

வினா 5 —அப்பொழுது விபீஷணர் விஷயத்தில் ராமர் என்ன செய்தார் ?

விடை.—உடனே ராமர் ' என்னிடம் யாராவது சரணம் என்று வந்துவிட்டால் அவன் விரோதியானு லும் அவனுக்கு அபயம் அளிப்பதே என் வ்ரதம். மேலும் இவன் ராவணனிலும் வசி, என்னை இவ னாலும் ஒன்றும் செய்யமுடியாது. ஆகையால் நான் இவனுக்கு அபயம் அளிக்கப்போகிறேன்,' என்று உறுதியாகச் சொல்லி ஸுக்ரீவன் சொல்லுக்கும் விரோதமாய், விபீஷணருக்கு அவர் அபயம் அளித் தார். உடனே விபீஷணர் கீழே இறங்க, அவரிடம் வந்த காரியத்தையும், அவர் வருவதற்கு ஏற்பட்ட காரணத் தையும் விசாரித்து, ராமர், அவர் நல்ல பக்தர் என்று கண்டு, அந்த ஸமுத்ரக் கரையிலேயே ஸமுத்ர ஜலத்

தால் அவருக்கு ராக்ஷஸ ராஜ்ய பட்டாபிஷேகத்தை முன்பாகவே செய்துமுடித்து, அவரையும் தமது முக்ய மந்த்ரிகளுள் ஒருவராக வைத்துக்கொண்டு வெகு கௌரவமாய் நடத்திவந்தார்.

வினா 6 —தன் தமையனுக்கு ஆபத்தாகிய பெரும் போர் விளையும் தருணத்தில் இவ்வாறு அவனைவிட்டு விபீஷணர் எதிரியினிடம் சரணம் என்று ஏன் வந்து அடைந்தார்?

விடை.—ஹநுமார் லங்கையை எரித்துவிட்டுச் சென்றதும், ராவணன் தனது மந்த்ரி ப்ரதானிகளோடு லங்கையை ராமபாணத்திலிருந்து காப்பாற்றுவதற்கு வேண்டிய ஆலோசனை செய்தான். அப்பொழுது ஒவ்வொரு துர்மந்த்ரியும், தானே தனிமையாகவே ராமரையும் அவரது வாநரர்களையும் அழிக்க வல்லவன் என்றும், அவன் ஸுகமாக ஸீதையோடு ஆநந்திக்கலாம் என்றும், ராவணனுக்குத் துர்ப்போதனைகள் செய்தான். (ராவணன் இவ்வாறு செய்யமுடியாததன் காரணத்தை உத்தரகாண்டத்தில் காண்க) அப்பொழுது கும்பகர்ணன் என்ற ராவணன் தம்பி, தன் தூக்கத்தை விட்டெழுந்தஸமயமா யிருந்ததால், அவனையும் ராவணன் இந்த விஷயத்தில் தனது அபிப்ராயத்தை வெளியிடும்படி கேட்டான். கும்பகர்ணன் ராவணன் செய்தது அநீதி என்றும், அதுவரையில் ராவணன் ராமபாணத்தால் இறவாதிருப்பது ஆச்சரியம் என்றும், ஸீதையை அவன் எடுத்து வந்துவிட்டமையால்தான் ஒருவனே ராவணஸேனையை அழித்துவிடுவேனாகவும் சொன்னான். இவ்வாறு ராவணனுக்குத் துர்ப்போதனைகள் ஏதிக்கொண்டு வருங்கால் அவ்வமயம்

பொறுக்க முடியாது, மிகுந்த துக்கத்துடன் விபீஷணர் எழுந்து தமது அபிப்ராயத்தை வெளியிட்டார். அடிமுதலே அவர் சொல்லிக்கொண்டு வந்தபடி, ஸீதையை ராமரது பாதாரவிந்தத்தில் சேர்த்துவிடுவதே, லங்கையை அபாயத்திலிருந்து காப்பதற்கு நல்ல வழி என்று அவர் சொன்னார். உடனே ராவணன் அந்தத் தர்மாத்மாவை ஸபையில் அவமானப்படுத்திக் கொடிய சொற்களாற் புண்படுத்தினன். இதைப் பொறுக்காது, விபீஷணர் தமது குடும்பம் முதலியவை களை விட்டு, லங்கையில் துராத்மாவான தமது தமையனோடு வஸிக்க மனமில்லாதவராய், ராமரது பாதாரவிந்தத்தில் சரணம் என்று வந்து விழுந்தார்.

வினா 7.—இவ்வாறு விபீஷணர் ஆபத்காலத்தில் தன் தமையனைத் தத்தளிக்க விட்டுவிட்டு ராமரிடம் சரணம் புகுந்து அவருக்கு ராவணனது ரஹஸ்யங்களைத் தெரிவித்தது ந்யாயமா?

விடை.—கெட்டவர்களுக்கு ஸஹாயம் செய்யாமல் விலகி, நல்லவர்களைச் சென்று சரணமடைதல் ந்யாயமே. ஆனால் அவ்வாறு அடைந்தபின்னர், கெட்டவன் இட்ட சோற்றைக் கருதாது, எதிரிக்கு அவனது ரஹஸ்யங்களைச் சொல்லிக்கொடுப்பது ந்யாயமன்று. அவன் சோற்றால் வளர்க்கப்பட்ட தேகத்தை அவனுக்காகச் சண்டையிட்டுப் பலியாகக் கொடுத்து அவன் சோற்றைத் தின்றதால் வந்த பாபத்தைக் கழிப்பதே மேன்மை. அவ்வாறின்றி எதிரிக்கு நேர் ஸஹாயம் செய்யாது, கெட்டவர்களைவிட்டுப் பிரிந்துபோவதும் உத்தமம். இவ்விருவழியும் இன்றி விபீஷணர் தமது தமையன் ஆளுகைக்குள், இவ்வளவு நாள் இருந்து

விட்டு, அவனுக்கு ஆபத்து வரும் ஸமயத்தில் எதிரியோடு சேர்ந்துகொண்டு, அவனது ரஹஸ்யங்களை வெளியிடுதல் ந்யாயமன்று. ஆனால் தமது தமையனை விட்டுப்பிரிந்தது ந்யாயந்தான். இது, கதையின் வெளிப்படை அர்த்தத்தை நோக்கினால் விளங்குவது. கதையின் உள்ளர்த்தத்தை நோக்கில் எவ்விதத்திலாவது விபீஷணர் என்ற ஸாத்விகமானது ராமர் என்ற பரமாத்மாவை அடைந்து, ராவணனாகிய அஹங்காரத்தை வேரோடு அழித்துவிடமுபலவேண்டியது ந்யாயந்தான். இவ்வாறு உள்ளர்த்தப்படி நோக்கினாலொழிய, வேறு எந்த விதத்திலும் விபீஷணரது செயலைமுற்றும் ந்யாயமென்று ஸ்தாபிக்க முடியாது.

வினா 8.—விபீஷணர் ராவணனை விட்டுவந்ததும், அவன் என்ன செய்தான்? அது என்னவாக முடிந்தது?

விடை.—ராவணன், சுகன் என்ற வேவுகார ராக்ஷஸனை அழைத்து, ராமரிடம் அனுப்பி, ஸுக்ரீவனையும் அவரையும் பிரித்துவைக்கத்தக்க வார்த்தைகளைச் சொல்லும்படி ஏவினான். மேலும் ராமர் தண்டிறங்கியிருக்கும் இடம், வாநரர்களது பலம் முதலியவைகளையும், பார்த்துவரும்படி ஏவினான். அவன் ஸமுத்ரத்தின் வடகரைவந்து ஆகாயத்தி லிருந்துகொண்டே ஸுக்ரீவனுக்கு ராவணன் சொல்லியனுப்பியதைச் சொல்ல, குரங்குகள் ஆகாயத்தில் கிளம்பி சுகனைப் பிடித்துக் கொல்லத் தொடங்கின. அப்பொழுது, சுகனது கூக்குரலால் ராமருக்குத் தெரியவர, அவர் அவனைக் கொல்லாது விட்டுவிடும்படி கட்டளையிட்டார். வாநரர்கள் சுகனைக் கஷ்டப்படுத்தாமல் சிறைபிடித்து

வைத்திருந்தார்கள். ஆகவே சுகனுக்கு அப்பொழுது ராவணனிடம் போகமுடியவில்லை.

வின 9.—இவ்வாறு விபீஷணர் வந்து சேர்ந்ததும், ராமர் அவரை என்ன ஆலோசனை கேட்டார்? பின்பு அவர் என்ன செய்வதாகத் தீர்மானித்தார்?

விடை.—விபீஷணர் வந்து வாநரர்களால் மேலான நிலையில் வைக்கப்பட்ட உடன், ராமர் அவரை ராவணன் விஷயமாய்ச் சில கேள்விகள் கேட்டார். அப்பொழுது அவர் ராவணனது மஹிமைகளைச் சுருக்கமாய்ச் சொல்ல, (உத்தரகாண்டத்தில் காண்க) ராமர் எவ்விதத்தாலாவது ராவணனைக் கொல்வதாகச் சபதங் கூறினார். அதன் பின்பு ராமர் ஸமுத்ரத்தைத் தாண்டும் வழியைப்பற்றிக் கேட்க, விபீஷணர், 'இந்த ஸமுத்ரம் உமது வம்சத்தைச் சேர்ந்த ஸகர சக்ரவர்த்தியின் குமாரர்களால் வெட்டப்பட்டது. ஆகையால் நீர் ப்ரார்த்தித்தால், ஸமுத்ரராஜன் க்ருபைகூர்ந்து உமக்கு ஏதாவது ஒரு வழி அவச்யம் விடுவான்' என்று உபாயம் சொல்லிக்கொடுத்தார். ஸுக்ரீவன் முதலிய வாநரர்களும் அதுவே நல்ல உபாயம் என்று அங்கீகரித்தனர் உடனே ராமர் பட்டினியோடு, ஸமுத்ரராஜன் ப்ரீதியை எதிர்பார்த்துக்கொண்டு, தர்ப்பைப் படுக்கையில் ஸமுத்ர ராஜன் ப்ரத்யக்ஷமாகும் வரையில் படுத்திருப்பதாகத் தீர்மானித்தார்.

வின 10.—ராமர் இவ்வாறு காத்திருக்க, ஸமுத்ர ராஜன் என்ன செய்தான்? பின்பு ராமர் என்ன செய்தார்?

விடை.—ராமர் இரண்டு மூன்று நாள் நியமம் தவறாது இருந்தபோதிலும், ஸமுத்ரராஜன் கர்வத்தால்

ப்ரத்யக்ஷமாகாமல் இருந்தான். இதைக் கண்டதும் ராமருக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே லக்ஷ்மணரைத் தமது வில்லைக்கொண்டுவரும்படி சொல்லி, ஸமுத்ரத்தை வற்ற அடித்து, ஸமுத்ரராஜனது கர்வத்தை அடக்கி வாநரர்களை லங்கைக்கு நடந்துபோகும்படி செய்துவிடலாம் என்ற எண்ணத்துடன் ராமர் தமது வில்லில் திவ்ய அஸ்த்ரங்களை மந்திரித்த அம்பு ஒன்றைத் தொடுத்து ஸமுத்ரத்துள் விட்டுவிட்டார். அப்பொழுது ஸமுத்ரம் கொதிக்கத்தொடங்க, ஸமுத்ர ராஜனுக்குப் புத்திவந்து ராமர் முன் தோன்றினான்.

வினு 11.—அப்பொழுது ஸமுத்ர ராஜன் தன்னைத் தாண்டி வாநரர்கள் போவதற்கு என்ன உபாயம் சொன்னான்?

விடை.—தன்னுள் வாநரர்கள போடும் வஸ்துக்களை எல்லாம் தான் மிதக்கும்படி செய்வதாகவும், அவைகளை விச்வகர்மாவின் (தேவதச்சனின்) பிள்ளையாகிய நளன் என்ற வாநர சரேஷ்டன் தொட்டால் அவைகள் உறுதியாய்ச் சேர்ந்துகொள்ளும் என்பதாகவும், இந்த மாதிரியே கல் முதலியவைகளைச் சேர்த்து ஸமுத்ரத்தின் குறுக்கே லங்கைவரை அணையிட்டு வாநர ஸேனைகளை லங்கையடையும்படி செய்யலாம் என்றும், ஸமுத்ரராஜன் உபாயம் சொல்லிக்கொடுத்தான். அணை கெடாது தான் பார்த்துக்கொள்வதாகவும் வாக்களித்துவிட்டு அவன் மறைந்தான்.

வினு 12.—எவ்வாறு வாநரர்கள் லங்கைவரை அணையிட்டனர்? அவர்கள் எவ்வாறு லங்கையை அடைந்தனர்?

விடை.—ஸமுத்ரராஜனது யோசனைப்படி ராமர் ஸமுத்ரத்தின் குறுக்கே அணையிட எண்ணி, மரம் கல் முதலியவைகளைக்கொண்டுவந்து ஸமுத்ரத்தில் போடும்படி எல்லா வாநரர்களையும், அவைகளைச் சேர்த்து அணையாக்கும்படி நளன் என்ற வாநர ச்ரேஷ்டனையும் ஏவினர். அவ்வாறே வாநரர்கள் யாவரும் சேர்ந்து வேலைசெய்து, நளன் ஸமுத்ரராஜன் ஆகிய இவர்களது ஸஹாயத்தால், லங்கைவரை ஐந்துநாளில் அணை போட்டு முடித்தனர். அதன்பின்பு வாநரர்களில் அநேகர் அணைவழியாகவும், சிலர் அணையின் ஓரமாய்த் தண்ணீரில் நீந்திக்கொண்டும், சிலர் ஆகாயமார்க்கமாகவும் அவரவர்களுக்குத் தோன்றியபடி உத்ஸாகமாய் லங்கை வந்துசேர்ந்தனர். ராமர் ஹநுமார் மேலும், லக்ஷ்மணர் அங்கதன் மேலும் ஏறிக்கொண்டு, லங்கை வந்துசேர்ந்தார்கள். லங்கை வந்ததும், ஸுக்ரீவனும் ராமரும் தமது ஸேனைகளை சாஸ்த்ரப்படி அணிவகுத்து நிறுத்தினர்.

வினு 13.—லங்கை வந்ததும், ராமர் என்ன செய்தார்? பின்பு என்ன நடந்தது?

விடை.—ராமர் லங்கை வந்ததும், வாநரர்களால் சிறைபிடித்துவைக்கப்பட்டிருந்த ராக்ஷஸ தூதனாகிய சுகனை விட்டுவிடும்படி ஏவினர். அவன் விடுதலையானவுடன் ராவணனிடம் சென்று, ராமரது வைபவங்கள் முதலியவைகளையும், அவர் ஸமுத்ரத்தில் அணையிட்டுத் தமது வாநர ஸேனையை லங்கை கொண்டு சேர்த்த விசித்ரத்தையும், எடுத்துச்சொல்லி, ஸீதையையாவது சீக்ரத்தில் ராமரிடம் கொண்டு போய் விடவேண்டும், அல்லது சண்டையையாவது

ஆரம்பிக்கவேண்டும் என்று சொன்னான். இதைக் கேட்டதும், விநாசகாலத்தால் விபரீத புத்தியோடு கூடியிருக்கும் ராவணன், தன்னை எதிர்த்து எந்த ச்ரேஷ்டனாகட்டும் பலவானாகட்டும் வந்தபோதிலும், தான் ஸீதையைப் பயத்தால் எதிரியிடம் கொண்டு போய்க் கொடுப்பதில்லை என்று சொல்லித் தனது பலபராக்ரமத்தைப் பலவாறு புகழ்ந்து வீண்பெருமை பேசிக்கொண்டிருந்தான்.

வி௫ 14.—இவ்வாறு ராமர் ஸேதுபந்தம் செய்து லங்கை வந்துவிட்டார் என்று கேட்டதும், ராவணன் யுத்தவிஷயமாய் என்ன ப்ரயத்நம் செய்தான்? அது எவ்வாறு முடிவுபெற்றது?

விடை.—ராமஸேனையின் அளவு, அதிலுள்ள குரங்குகளின் பராக்ரம விசேஷம், ஆகிய இவைகளை அறிந்துவரும்படி சுகஸாரணர் என்ற இரண்டு வேவுகாரரை ராவணன் அனுப்பினான். இவர்கள் குரங்குகளது உருவத்தை எடுத்துக்கொண்டு, வானர ஸேனையில் புகுந்து, ஸேனையின் அளவு முதலியவை களை நோக்கிவருகையில், விபீஷணர், இவர்களைக்கண்டு, கொன்றுவிடலாம் என்ற எண்ணத்துடன் இவர்களைப் பிடித்து ராமர் முன் கொண்டுபோய்விட்டு இவர் செய்துகொண்டிருந்த கார்யத்தை வெளியிட்டார். தர்மாத்மாவான ராமர், 'இவர்களைக் கொல்லக்கூடாது, இவர்கள் வந்த காரியம் முடிந்துவிட்டால், இன்னிக சண்டை முதலியவைகள் செய்யாது ஸாவதானமாய் வெளியே போகட்டும். இல்லாவிடில் விபீஷணா! இவர் களைக் கூட்டிக்கொண்டுபோய் நமது ஸேனை முழுவதை யும் காட்டி ராவணனிடம் சீக்ரமாய் அனுப்பிவிடும்

என்று உத்தரவுசெய்தார். மேலும் ராமர் சுகஸாரணர்களிடம் 'மறுநாட் காலைக்கு முன்' ஸீதையைத் தம்மிடம் கொண்டுவந்துவிட்டால் ஸரி, இல்லாவிடில் யுத்தம் தொடங்கப்படும்' என்று ராவணனோடு தாம் சொன்னதாகச் சொல்லும்படி ஸங்கதியையும் சொல்லிவிட்டார். சுகஸாரணர்கள் ராவணனிடம் இதைச் சொல்லி, ஸீதையை ராமரிடம் கொண்டுபோய் விடுவதே நலம் என்று அவனுக்கு மஹா விநயத்துடன் புத்திமதி கூறினர்.

வினா 15.—இதைக் கேட்டதும், ராவணன் என்ன செய்தான்? பின்பு என்ன நடந்தது?

விடை —'என்ன ஆபத்து எனக்கு வந்தபோதிலும் ஸீதையை ஒருவருக்குப் பயந்து ராமரிடம் கொண்டுபோய் விடமாட்டேன்' என்று பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டு, ராவணன் சுகஸாரணர்களோடு ஒரு பெரிய உப்பரிகையின்மீது வாநரஸேனையைப் பார்ப்பதற்காக ஏறினன். அப்பொழுது பெரிய ஸமுத்ரம் போல் வந்து கூடிக்கிடக்கும் வாநரஸேனையுள், வாநரச்ரேஷ்டர்கள், ராம லக்ஷ்மண ஸுக்ரீவர் முதலியவர்களை ராவணனுக்குக் காட்டி அவர்களது பல பராக்ரமங்களையும் சுகஸாரணர்கள் எடுத்துரைத்தார்கள். வாநரஸேனை கணக்கில்லாது லங்கையில் கூடிக்கிடப்பதும், அவர்களது பலபராக்ரம விசேஷமும் ராவணனுக்குத் தெரியவந்ததும் மனங்கலங்கி அவனுக்குக் கோபம்வர சுகஸாரணர்களை வாயில் வந்தபடி எல்லாம் வையத் தொடங்கினன். அது கோபவேளை என்று அறிந்த சுகஸாரணர்கள், ராவணனைத் தனிமையாய் விட்டு விட்டுத் தமது இருப்பிடம் சென்றனர். இதுபோல

வேறு தூதர்கள் மூலமாயும் வானரஸேனை அளவிட முடியாததாய் இருக்கிறது என்பதை ராவணன் தெரிந்துகொண்டு, மிகுந்த துக்கத்தை அடைந்தான்.

வினா 16.—இவ்வாறு மனங்கலங்கி இருக்கும் ராவணன், ஸீதையை இந்த ஸமயத்தில் எவ்வாறு வசம் செய்யப்பார்த்தான்? அது எவ்வாறு முடிவுபெற்றது?

விடை.—ராவணன் தனது மந்த்ரிமாரை ஆலோசனை ஸபைக்கு அழைத்துவரும்படி சொல்லிவிட்டு, தன் ஸ்நேகிதனான வித்யுத்ஜிஹ்வன் என்ற ராக்ஷஸனை மாயையால் ராமரது தலை ஒன்றைச் சிருஷ்டித்து எடுத்துக்கொண்டு அசோகவநம் வரும்படி சொல்லிவிட்டு, ராவணன் ஸீதையிடம் வந்தான்; ஸீதையிடம், ராமர் உறங்குகையில், தன் மந்த்ரி ப்ரஹஸ்தன் சென்று அவர் தலையை வெட்டிவிட்டான் என்றும், அவருக்கு ஸஹாயமாக வந்த வானரவீரர்கள் எல்லோரும் சின்னபின்னமாகி ஓடிப்போய் விட்டார்கள் என்றும், ஆகையால் அவளுக்கு ராவணன்தான் கதி என்றும், தன்னையே அவள் விவாஹம் செய்துகொண்டு ஸுகத்தை அனுபவித்துவரலாம் என்று சொல்லி, வித்யுத்ஜிஹ்வனுக்கு ஜாடை காட்டினான். அவன் ஸீதை முன்பு திடீரென்று தோன்றி மாயா ராமர் தலையை வீசி எறிந்தான். ஸீதை இதை உண்மைதான் என்று எண்ணி, வெகுவாகப்ரலாபித்துவிட்டுத் தானும் ராமரோடு லோகாந்தரம் போவதாக எண்ணினாள். ஆகையால் இதனாலும் ராவணன் கருத்து நிறைவேறவில்லை; இதற்குள் மந்த்ரிகள் ஆலோசனை ஸபைக்கு வந்து காத்திருப்பதாக ஸேவகர் தெரிவிக்க, ராவணனும் அவன் ஸ்நேகிதனும் வெகு அவஸரமாய்ப்போய்

விட்டார்கள். அவர்களோடு மாயா ராமர் தலையும் மறைந்துபோயிற்று.

வினா 17.—அப்பொழுது துக்கித்துக்கொண்டிருந்த ஸீதையை யார் எவ்வாறு தேற்றி என்ன செய்தார்கள்?

விடை.—ஸீதையைச் சூழ்ந்திருந்த ராக்ஷஸிகளில் (விபீஷணர் மனைவி) ஸீதைக்குத் தைர்யம் வரும்படி, அவள் கண்டது யாவும் ராக்ஷஸ மாயை என்றும், ஆகையால்தான், ராவணன் போனதும், ராமர் தலை மறைந்து விட்டதென்றும், ராமரை ஒருநாளும் ஒருவராலும் கொல்லமுடியாதென்றும், வெகுவாகச் சொன்னாள். அப்பொழுது ஒருவாறு தேறுதல் அடைந்து, ஸீதை ராவண ஸபையில் தன் விஷயமாக ஏற்படும் தீர்மானத்தைத் தன்னிடம் வந்து சொல்லும்படி ஸரமையை வேண்டிக்கொண்டாள். அவள் அவ்வாறு கேட்டுவந்து 'உன்னைக்கொண்டுபோய் ராமரிடம் விடுவதே நலம் என்று அநேக ராக்ஷஸர்கள் சொல்லியும் ராவணன் கேட்காது யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதாகத் தீர்மானித்திருக்கிறான். கூடிய சீக்ரத்தில் ராமர் அவனைக் கொன்று உன்னை மீட்டுக் கொள்வார்' என்று சொல்ல ஸீதைக்குப் பூர்ண தைர்யமும்வந்துவிட்டது.

வினா 18.—ராவணனது மந்த்ராலோசனை ஸபையில், என்னனென்ன நடந்து என்ன தீர்மானம் பிறந்தது?

விடை.—முதலில் ராவணன், ஸபையில் ராமரை இகழ்ந்து பேசிவிட்டு, அங்கு வந்து கூடியிருந்த பெரியோர்களைத் தமது அபிப்ராயத்தைச் சொல்லும்படி

கேட்டான். அப்பொழுது ராவணனது பாட்டனா மால்யவான், தன் பேரனது நடத்தையைப் பலவாறு பழித்துவிட்டு, ராமர் விஷ்ணுவின் அவதாரம் என்றும், அவரை எதிர்ப்பது அஸாத்யம் என்றும், மனிதர் குரங்குகள் இவைகளிலிருந்து சாவு வராது என்ற தைர்யம் அவனுக்கில்லை என்றும், ஆகையால் ராமரோடு ஸமாதானம் செய்துகொண்டு ஸீதையை அவரிடம் கொண்டுபோய்விடுவதே நலம் என்றும், பலவிதமாக ராவணனுக்கு நல்ல புத்தி உரைத்தான். இதுபோலச் சிலர் நல்ல புத்தி சொல்லியும் கேட்காது, மறுநாள் நடக்கவேண்டிய யுத்தத்திற்கு ராவணன் ஸித்தம் செய்யத் தொடங்கினன்.

வி௭௱ 19.—ராவணன் லங்கையைக் காப்பாற்றும் விஷயத்தில் தன் ஸேனையை எவ்வாறு வகுத்தான்? இதை ராமர் எவ்வாறு அறிந்து தமது ஸேனையை எவ்வாறு பிரித்தார்?

விடை.—லங்கை கீழ்வாயிலில் ப்ரஹஸ்தனையும், தெற்கு வாயிலில் மஹோதரன், மஹாபார்ச்வன் ஆகிய இவர்களையும், மேல்புறத்தில் தன் பிள்ளையாகிய இந்த்ரஜித்தையும், வடபுறத்தில் சுகஸாரணர்களையும் ஏராளமான ராக்ஷஸஸேனைகளோடு நிற்கும்படி ஏற்பாடுசெய்துவிட்டு, தானே வடபுறம் சென்று யுத்தம் செய்வதாகவும், அப்பொழுது விரூபாக்ஷனை அநேக ராக்ஷஸர்களோடு மத்தியில் ஸஹாயார்த்தம் இருக்கும்படியாகவும் ராவணன் தனது ஸேனையை ஒழுங்கு படுத்திவிட்டான். இதை விபீஷணர் உத்தரவால் அவரோடு வந்த நான்கு ராக்ஷஸர் கேட்டுவந்து விபீஷணரிடம் சொல்ல, அவர் இவைகளை ராமருக்குத் தெரிவித்

தார். அப்பொழுது அன்று மாலைக்குள்ளாகவே, ராவணனது ஒழுங்கிற்கேற்ப, நீலனைக் கிழக்கு வாயிலிலும், அங்கதனை தெற்கு வாயிலிலும், ஹநுமானை மேற்கு வாயிலிலும், தாமும் லக்ஷ்மணரும் வடக்கு வாயிலிலும் ஏராளமான வாநரர்களோடு இருந்து மறுநாட் காலையில் சண்டையைத் தொடங்கவேண்டுமென்றும், விபீஷணர், ஸுக்ரீவன், ஜாம்பவான் முதலியோர் அநேக வாநரர்களோடு மத்தியிலிருக்கவேண்டுமென்றும் வாநரர் தமது சொந்த ரூபங்களோடு சண்டையிடவேண்டுமென்றும் ராமர் ஏற்பாடு செய்துவிட்டு, பௌர்ணமியாகிய அன்றிரவை ஸுவேல பர்வதத்தில் லங்கையையும் ஒருவாறு பார்த்துக்கொண்டு கழிப்பதாக எண்ணி வாநரங்களோடு அப்பொழுது அந்த மலைமேல் ஏறினார்.

வின 20.—இங்கிருக்கும்போது அன்றிரவில் என்ன விசேஷகார்யத்தை ஸுக்ரீவன் செய்தான். ஏன் ?

விடை.—நல்ல சந்த்ரிகை வீசிக்கொண்டிருக்கும் அந்த இரவில் வெண்சாமரை ஆலவட்டக்குடை முதலிய விருதுகளுடன், ராவணன் ஒரு வாயில் மேலுள்ள உப்பரிகையில் உலாவவந்தான். இது ஸுவேல பர்வதத்தின்மேலிருந்த ஸுக்ரீவன் கண்ணிற்பட, அவனுக்கு, 'ராமர் இவ்வாறு ஸீதையைப் பிரிந்து வருந்துங்கால், துராத்மாவான ராவணனுக்கென்ன இவ்வளவு வைபவம்,' என்று தோன்ற, அவன் உடனே ஆகாயத்தில் கிளம்பி ராவணன் ஸமீபம் வந்து தனது காலால் அவன் பத்து கிரீடங்களையும் எடுத்துக் கீழே எறிந்து, அவனை மாநபங்கம்செய்து, தான் ராம

ஸேவகன் ஸுக்ரீவன் என்று அவனுக்குத் தெரிவித்தான். அப்பொழுது ராவணனுக்கும் ஸுக்ரீவனுக்கும் சண்டையுண்டாகிக் கொஞ்ச நாழிகை சண்டை நடந்தது. அதில் ராவணனுக்கு மிகுந்த அவமானம் உண்டாயிற்று. இவ்வாறு குரங்கால் மொத்துண்டு கஷ்டப்படுகையில், ராவணன் மாயையை ப்ரயோகித்து யுததஞ்செய்வதாக எண்ண, இந்த எண்ணத்தை ஸுக்ரீவன் அறிந்தவுடன், ராவணனை நன்றாய் அடித்து அவமானப்படுத்திவிட்டு ஆகாயத்தில கிளம்பி ராமரது ஸந்நிதானம் வந்து சேர்ந்தான். ராமர் தமக்குத் தெரிவிக்காது, ஸுக்ரீவன் இந்த அபாய கார்யத்தைச் செய்துவந்ததை எண்ணிக் கொஞ்சம வருத்தமடைந்தார். ஸுக்ரீவனிடமிருந்த அதிக ஸ்நேததால் ராமர் இவ்வாறு வருந்தும்படியாயிற்று

வினா 21.—மறுநாட் காலையில் லங்கையில் என்ன நடந்தது? என்னவாக எல்லாம முடிவுபெற்றது?

விடை—மறுநாட் காலையில் ராமர் முன்னாள் செய்த ஏற்பாட்டின்படி, வாநரர்கள் லங்கையை வளைந்துகொண்டனர். ராக்ஷஸர்களும் சண்டைக்கு அவர்கள் செய்திருந்த ஏற்பாட்டின்படி தயாராயினர். இவ்வாறு இருதிறத்தாரும தயாராயிருக்கையில், ராமர் அங்கதனை அழைத்து, ராவணனிடம் கடைசியாகத் தூதனுப்பி, 'நாங்கள் ஸீதையை மீட்டு வருவதற்காக ஸமுத்ரத்தைக் கடந்துவந்திருக்கிறோம். நீ ஸீதையைத் திருடிவந்ததற்காக உன்னை இப்பொழுது கஷ்டப்படுத்தப் போகிறோம். நீ மர்யாதையாய் ஸீதையைக்கொண்டு ராமரிடம் விட்டுவிட்டால் உயிரோடு வெகு காலம் லங்கையில் வாழலாம்; இல்லா

விடில் இறக்கவேண்டியதுதான், என்று சொல்லி அவன் பதிலைக் கேட்டு வரும்படி அனுப்பினர். ராவணனிடம் சென்று, ராமர் சொன்னதை அங்கதன் சொல்ல ராவணனுக்குக் கோபம் வந்துவிட்டது. அங்கதனைக் கொல்லும்படி ராவணன் சில ராக்ஷஸர்களை ஏவ, அவர்கள் தன்னைப் பிடிக்கும்வரையில் சும்மாவிருந்து அவர்களைத் தனது கக்ஷத்தில் இடுக்கிக்கொண்டு, உயரக் கிளம்பி அங்கதன் அவர்களைக் கீழே எறிந்துவிட்டான். அதன் பின்பு அங்கதன் ராவணனது ஒரு அரண்மனையை இடித்துக் கீழே தள்ளிவிட்டு ராமரிடம் ராவணனது நடத்தையைச் சொல்ல ராமர் யுத்தத்தைத் தொடங்கும்படி உத்தரவுசெய்தார்.

வின 22.—ராமர் இவ்வாறு உத்தரவு செய்ததும் அன்று பகலில் என்ன நடந்தது?

விடை.—ராமரது உத்தரவு பிறந்தவுடன் வானரர்கள் அப்பொழுதே லங்கையைத் தாக்கத்தொடங்கி, அட்டஹாஸம் செய்தனர். இந்த ஸமாசாரத்தை ராவணனுக்கு அவன் தூதர்கள் தெரியப்படுத்த, அவனும் சண்டையைத் தொடங்கும்படி ராக்ஷஸர்களுக்கு உத்தரவுசெய்தான். அன்று பகல் நடந்த யுத்தத்தில், அநேக ராக்ஷஸர்கள் வானரர்களால் மொத்துண்டு கீழே விழுந்தனர். வானரர்களில் சிலரும் மாண்டு யுத்தகளத்தில் 'ராம கார்யமாக வெகு ஸந்தோஷத்தோடு விழுந்தனர். இவ்வாறு ராக்ஷஸ வீரர்கள் அடிபட்டு விழுந்துகொண்டே வருகையில் அங்கதனுக்கும் இந்த்ரஜித்துக்கும் பெரிய யுத்தம் உண்டாயிற்று. அதில் அங்கதன் வெகுகாலம் இந்த்ரஜித்தோடுசண்டை செய்து முடிவில் அவனது ஸஹாய

வஸ்துக்கள் எல்லாவற்றையும் அழித்து, இந்த்ரஜித்தைப் பூமியில் வெறும் ஆளாக நிறுத்திவிட்டான். இதைக்கண்ட வாநரர்கள் யாவரும் அங்கதன் பலத்தை வியந்தனர். இதற்குள் ஸூர்யன் அஸ்தமனமாக, இருள் மூடிக்கொண்டது.

வினா 23.—இவ்வாறு அங்கதனால் தோல்வியடைந்த இந்த்ரஜித்து, அப்பொழுது என்ன செய்தான்?

விடை.—இரவு மூடிக்கொண்டபோதிலும் யுத்தம் நிற்கவில்லை. இந்த்ரஜித்து மிகுந்த அவமானத்துடன் யுத்தகளம்விட்டு ஓடிப்போய், தன் மாயையால் தன்னை மறைத்துக்கொண்டு, ராம ஸேனையோடு கோரமான அதர்மயுத்தம் செய்யத்தொடங்கி, அநேகம் வாநரர்களை ஸம்ஹாரம் செய்தான். இவ்வாறு, இருட்டினாலும், அவனது மாயையாலும் அவன் புலப்படாமல் போனமையால், வாநரர்கள் கை கொஞ்சம் இறங்கத் தொடங்கியது. இதுதான் ஸமயம் என்று இந்த்ரஜித்து, ராமலக்ஷ்மணர்கள் இருக்குமிடம்வந்து, நாகாஸ்த்ரத்தை மறைந்திருந்து ப்ரயோகம் செய்து, வேறு எங்கேயோ ஞாபகத்தோடு சண்டையிட்டுக்கொண்டிருந்த அவர்களைத் தாக்கினான். நாகபாசத்தால் கட்டுப்பட்டு, தேகத்தின் மர்ம ஸ்தலங்களில் நல்ல அடிபட, ராமலக்ஷ்மணர்கள் யுத்தகளத்தில் மூர்ச்சைபோட்டு விழுந்தனர்.

வினா 24.—இவ்வாறு ராமலக்ஷ்மணர்கள் ப்ரக்ஞையின்றி யுத்தகளத்தில் விழுந்ததும், அங்கு வாநரர்களுள் என்ன நடந்தது?

விடை.—ஸுக்ரீவன், ஹநுமார், முதலிய வாநரர்கள், உடனே அங்கு வந்து துக்கிக்கலாயினர். விபீஷணரும் தமக்கு வந்திருந்த வாழ்வு யாவும் போயின என்று துக்கித்தார். இவ்வாறு கொஞ்ச நாழிகை எல்லோரும் துக்கித்த பின்பு, விபீஷணர் குரங்குகளை நோக்கி, 'வாநரர்களே! துக்கப்படாதேயுங்கள். நமக்கு அதிர்ஷ்டமிருந்தால் கொஞ்ச நாழிகைக்கெல்லாம் நாகபாசங்களின் வேகம் குறையும். அப்பொழுது இவர்கள் முன்போலவே எழுந்துவிடுவார்கள். அதுவரையில் உங்களுள் குழப்பம் வராது, ஸந்தோஷத்தோடு எல்லோரும் தற்கால துக்கத்தைப் பாராட்டாதிருங்கள்,' என்று சொல்லித்தேற்ற ஒரு விதமான ஸமாதானம் அவர்களுக்கு உண்டாயிற்று. எல்லோரும் ஒழுங்காகவே இருந்தனர்.

வினா 25.—இவ்வாறு அதர்ம யுத்தம் செய்துவிட்டு இந்த்ரஜித்து என்ன செய்தான்? பின்பு என்ன நடந்தது.

விடை.—இவ்வாறு தத்ஸமயத்திற்கு மூர்ச்சை போனதுபோலக் கீழேவிழுந்த ராம லக்ஷ்மணரை, தான் தனது நாகபாசங்களால் கொன்றுவிட்டதாக எண்ணிக் கர்வங்கொண்டு இந்த்ரஜித்து ராவணனிடம் சென்று, தனது பராக்ரமத்தை வெளியிட்டான். அப்பொழுது ராவணனுக்கு மிகுந்த ஸந்தோஷமுண்டாயிற்று. உடனே அவன் ஸீதையின் தோழியாகிய த்ருஜடையை அழைத்து, ஸீதையிடம் ராமர் இந்த்ரஜித்தால் எதிர்க்கப்பட்டு இறந்து யுத்தகளத்தில் விழுந்திருக்கும் ஸங்கதியைச் சொல்லும்படியாகவும், அதன் பின்பு ஸீதையைப் புஷ்பக விமானத்தில் ஏற்றிக்கொண்டு

போய் யுத்தகளத்தில் விழுந்து கிடக்கும் ராமனைக் காண்பித்து வரும்படியாகவும், சொல்லியனுப்பிவிட்டு, 'இனிமேல் நம்மைத்தான் ஸீதை சரணமடையவேண்டும்' என்றும் ராவணன் கர்வத்தோடிருந்தான்.

வினு 26.—அப்பொழுது த்ருஜடை என்ன செய்தாள்? ஸீதையின் நிலை எவ்வாறிருந்தது? முடிவில் என்ன நடந்தது?

விடை.—த்ருஜடை, புஷ்பகத்தில் ஸீதையை ஏறும்படிசெய்து, யுத்தகளத்திற்கு அவளை அழைத்துச் சென்றாள். ஸீதை தனது ப்ராணநாயகரான ராமரும், மைத்துனராகிய லக்ஷ்மணரும் அசைவற்று இந்த்ரஜித்தின் நாகபாசங்களால் கட்டுண்டு, கிடப்பதைக்கண்டு, அவர்கள் இறந்து விட்டார்கள் என்று எண்ணி வெகுவாக ப்ரலாபிக்கலானாள். அப்பொழுது த்ருஜடை, வானரஸேனைகள், முகம் வாடாதிருப்பதைக் கண்டு, அதை ஸீதைக்குக் காட்டி, ராமர் உயிரோடிருக்கிறாரென்றும், அவர் கூடிய சீக்ரத்தில் எழுந்துவிடுவார் என்றும், நல்ல வார்த்தைகளால் ஸமாதாநம் செய்ய, ஒருவாறு மனந்தேறி, லங்கைக்குள் ப்ரவேசித்து அசோகவநத்தில் ராமர் விஷயமாகத் துக்கித்துக்கொண்டிருந்தாள்.

வினு 27.—யுத்தகளத்தில் ராமலக்ஷ்மணர்கள் வாநரர்கள் இவர்களது ஸ்திதி என்னவாக இருந்தது? ஏன்?

விடை.—விபீஷணரால் கொஞ்சம் தைர்யத்தை அடைந்து ஸுக்ரீவாதி வாநரர்கள் ராமலக்ஷ்மணர்களது மூர்ச்சைத்தெளிவை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். இவ்வாறிருக்க, நாகபாசத்தின்

கட்டுகள் இருந்த போதிலும், திடதேகமுடைய ராம ருக்கு மூர்ச்சை தெளிந்தது. உடனே தன்னருகில் செயலற்று விழுந்து கிடக்கும் லக்ஷ்மணர் இறந்து விட் டார் என்று எண்ணி, ராமர் வெகுவாகத் துக்கிக்கலா னார். அப்பொழுது வாநரர்களை எல்லாம் தமது இருப்பி டம்போகச்சொல்லி அதிக துக்கத்தால், அவர்களுக்கு ராமர் விடைகொடுக்கத் தொடங்கினர். அப்பொழுது வாநரர்களுக்குத் துக்கம் அதிகரித்தது. விபீஷணரோ, ஒரு கெதையைக் கையில் வைத்துக்கொண்டு, ராமரது இருப்பிடம் செல்ல, அவரை இந்த்ரஜித்து என்று கருதி, வாநரர்கள் நான்கு பக்கங்களிலும் ஓடத் தலைப்பட்டனர். அப்பொழுது ஸுக்ரீவன், 'விபீஷ ணரைக் கண்டு பயந்து ஓடாதேயுங்கள்' என்று குரங்குகளை எச்சரிக்கை செய்து தைர்யப்படுத்த, வாநர ஸேனையில் உண்டான குழப்பம் அடங்கியது.

வின 28.—ராம லக்ஷ்மணர்களது கஷ்டத்தை ஸுக்ரீவன் நிவர்த்திசெய்ய என்ன உபாயம் செய் தான்? அப்பொழுது திடீரென்று யார் வந்து எவ் வாறு அவர்களது கஷ்டத்தைத் தீர்த்தது?

விடை.—வாநரர்களும் ராமரும் இவ்வாறு துக் கித்துக்கொண்டிருக்கையில், ஸுக்ரீவன் ராமலக்ஷ்மண ர்களைக் கிஷ்கிந்தைக்கு அனுப்பி, வைத்தியம் செய்து நல்ல ஸ்திதிக்கு வரும்படி செய்யவேண்டிய ஏற் பாட்டையும், அதன் மத்தியில் ராவணனோடு சண்டை செய்து ஸீதையை மீட்டுவருவதற்கு வேண்டிய ஏற் பாட்டையும் செய்துகொண்டிருந்தான். இவ்வா றெல்லாம் இருக்கையில், திடீரென்று ப்ரளயகாலக் காற்றைப் போலப் பெருங்காற்றடிக்க, மரங்கள்

முறிந்துவிழுந்தன. ஸமுத்ரம் அல்லோல கல்லோலப் பட்டது. இவ்வாறு எல்லாவற்றையும் தமது சிறகுக் காற்றால் அசைத்துக்கொண்டு, *கருடபகவான் யுத்த களத்தில் அன்றிரவு வந்துவிட்டார். இந்தப் பெருங் காற்றுப் பட்டதுமே, ராமலக்ஷ்மணர்களது நாகபாசக் கட்டுகள் தளர, நாகங்கள் யாவும் இறந்தன. கருடன் ராமலக்ஷ்மணர்களுக்கு வந்த ஆபத்தைத் தேவதைகள் மூலமாய்க் கேள்விப்பட்டே, ஸமயத்தில் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அன்றிரவு அங்கு வந்தார். வந்த உடன் ராமலக்ஷ்மணர்களைத் தமது இறகுகளால் தடவிக்கொடுக்க, அவர்கள் மூர்ச்சை தெளிந்து எழுந்து முன்போன்ற தேகஇடத்தை உடையவர்களாயினர். கருடபகவான், ராம லக்ஷ்மணர்களை வலம் வந்து, தமது இறகுகளால் அவர்களைத் தழுவிவிட்டு, தாம் அவ்வாறு கேள்விப்பட்டு வந்திராவிடில், நாகபாசம் சின்னபின்னமாகவே மாட்டாது என்பதை வானரர்களுக்குத் தெரிவித்துவிட்டுத் தமது இருப்பிடம் சென்றார்.

வி. 29.—இவ்வாறு கருடபகவான் வந்து போனதும், மறுநாட்காலையில் யுத்தம் எவ்வாறு நடந்தது?

விடை.—கருடபகவான் ராம லக்ஷ்மணர்களை எழுப்பிவிட்டுப்போனதும், வானரர்கள் அட்டஹாஸம் செய்யத் தொடங்கினர். மறுநாட் காலையில் வானர ஸேனையிலுள்ள ஸந்தோஷத்தின் காரணத்தைத் தூதர்களால் அறிந்த ராவணன், நாகபாசம் பயனின்றிப் போனதை உத்தேசித்துத் துக்கித்து விட்டு, தூம் ராக்ஷன் என்ற ராக்ஷஸ ச்ரேஷ்டனை அஸங்க்ய ஸேனை

களோடுபோய் வாநரர்களை எதிர்க்கும்படி ஏவினன். இவன் ஹநுமார் சண்டை செய்துகொண்டிருந்த கோட்டை வாயிலுக்குப்போய் சண்டை செய்யத் தொடங்க, ஹநுமார், இவனோடு கொஞ்ச நாழிகை விசித்ர யுத்தம் செய்துவிட்டு, கடைசியில் ஒரு பெரும் பாறையால் தூம்ராக்ஷஸனை ஸம்ஹாரம் செய்தார். இந்த ஸங்கதியைக் கேள்விப்பட்ட ராவணன், வஜ்ரதம்ஷ்ட்ரன் என்ற ரக்ஷஸனை, ராக்ஷஸ ஸேனையோடு இரண்டாம் தரம் அனுப்ப, அவன் அங்கதன் சண்டையாடிக் கொண்டிருந்த கோட்டைவாயில் வந்து போர்செய்யத் தொடங்கினன். அங்கதன் வெகு விசித்ரமாய் அவனோடு வந்த ராக்ஷஸர்களை முதலில் கொன்றுவிட்டு, பின்பு வஜ்ரதம்ஷ்ட்ரனோடு த்வந்த்வ யுத்தஞ்செய்தான். இதன்முடிவில், தன்னிடம் இருந்த பட்டாக்கத்தியால் அங்கதன் வஜ்ரதம்ஷ்ட்ரனது தலையை அரிந்துவிட்டான். இந்த ஸமாசாரம் ராவணனுக்கு எட்டியதும், அகம்பனன் என்ற ஸேநாதிபதியை அநேக ராக்ஷஸர்களோடு அனுப்ப, அவன் நீலன் முதலிய வாநரர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்த இடத்திற்குச் சென்று, வாநரர்கள் எல்லோரும் வெருண்டு ஓடும்படி சண்டைசெய்தான். இதைப் பார்த்திருந்த ஹநுமார், அகம்பனோடு யுத்தஞ்செய்ய வந்து, அவனைக் கடைசியில் ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கி அடித்துக் கொன்றார். இதன் பின்பு ராவணன் தனது முதல் ஸேநாதிபதியாகிய ப்ரஹஸ்தனை மிகுந்த ராக்ஷஸ ஸேனையோடு அனுப்ப, அவன் வெகு ஸாவதானமாய் சண்டைக்கு வந்தான். இதைக்கண்டு யாவரும் வியந்தனர். இவன் வாநரர்களோடு வெகு

கோரயுத்தம் செய்துகொண்டிருக்கையில், நீலன் என்ற வானர ச்ரேஷ்டன் எதிர்த்து. முடிவில் ஒரு பெரிய பாறையால் அவனது மண்டையைப் பிளந்தான்.

வினு 30.—இவ்வாறு ராவணனன் முக்ய ஸேநாதிபதிகளும் ஸேனைகளும் இறந்ததும், அவன் என்ன செய்து என்ன கதியை அடைந்தான் ?

விடை.—நீலனால் தனது முக்ய ஸேநாதிபதியாகிய ப்ரஹஸ்தன் இறந்தான் என்றுகேள்விப்பட்டதும், ராவணனே அநேக ராக்ஷஸர்களோடு சண்டைக்குப் புறப்பட்டான். அப்பொழுது ராக்ஷஸர்களுக்கு மிகுந்த குதூஹலம் உண்டாக, அவர்கள் வானரர்களை அன்று ஸாயங்காலம் எதிர்க்கலாயினர். ராவணன் அப்பொழுது தனது பராக்ரமத்தால், ஸுக்ரீவன் நீலன் முதலிய வானர ச்ரேஷ்டர்களை எல்லாம் முறியடிக்க, அவர்களில் சிலர் ராமரைச்சென்று சரணமடைந்தனர். பின்பு ராவணன் மிகுந்த கஷ்டத்தின்பேரில் ஹநுமாரை ஒருவாறு செயலற்ற நிலைக்குக் கொண்டுவந்தான். அந்தத் தருணத்தில் ஹநுமாரை விட்டுவிட்டு, நீலனோடு அவன் சண்டைசெய்யத் தொடங்கினன். இதற்குள் ஹநுமானுக்குப் பலம் வ்ருத்தியாக, அவர் ராவணனை எதிர்க்கவந்தார். அப்பொழுது, நீலனோடு கவனமாய்ச் சண்டையாடுகையில் தாம் நடுவில் புகுதல் அதர்மம் என்று அவருக்குத் தோன்ற, ஹநுமார் சும்மா இருந்துவிட்டார். நீலன் இந்தச் சண்டையில் தனது உருவத்தைக் குறுக்கிக்கொண்டு, ராவணனது கொடியில் வந்து உட்கார்ந்து அட்டஹாஸஞ்செய்தான். அப்பொழுது ராவணனுக்கு இன்னசெய்வது என்று தோன்றாமற் போக, முடிவில் நீலனை அவன்

அடித்துத் தள்ளிவிட்டான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த லக்ஷ்மணர், ராமரிடம் விடைபெற்று ராவணனை வந்து எதிர்த்தார். அப்பொழுது ராவணன் வெகு நாழிகை அவரோடு கொடிய யுத்தம் செய்து, முடிவில் ப்ரம்மாஸ்திர ப்ரயோகம் செய்தான். அது லக்ஷ்மணர் கையில் வந்து விழுந்தது. லக்ஷ்மணர் செயலற்று விழுவதைக் கண்டு, ஹநுமார் ராவணனை எதிர்த்து, அவன் முட்டிக்கால் போட்டுக்கொண்டு மூர்ச்சையாகத் தேர்த்தட்டில் விழுந்து அவமானப் படும்படி செய்தார். உடனே லக்ஷ்மணரை ஹநுமார் தமது பராக்ரமத்தால் ஒதுப்புறமான இடத்திற்குக் கொண்டுபோய்விட, அப்பொழுது லக்ஷ்மணர் தமது மூலரூபத்தை ஞாபகப்படுத்திக்கொண்டு பழைய நிலைமையை அடைந்தார். இவ்வாறு முடிவில், ஹநுமார் ஒருவரால்தான், ராவணன் யுத்த ச்ரமத்தால் மூர்ச்சைபோய் விழும்படி நேரிட்டது. மற்றைய எல்லா விஷயங்களிலும் அன்று அவனுக்கு அதுவரையில் ஜயமே வந்துகொண்டிருந்தது.

விஞ 31.—இவ்வாறு ஜயம் அடைந்து வரும் ராவணனை யார் எதிர்க்க, அவன் கதி என்னவாயிற்று?

விடை.—அன்று ஸாயங்காலம் ராவணனுல் வாநரர்கள் மொத்துண்டு வருந்துவதைக் கண்ட ராமர், அஸ்தமன காலத்தில் ராவணனை எதிர்த்தார். உடனே ஹநுமார் ராமருக்கு வாஹனமாக வந்து அமர்ந்து கொண்டார். அப்பொழுது உண்டான சண்டையில், ராவணன் ஹநுமாரையே முன்னிருந்த த்வேஷத்தைக்கொண்டு காயப்படுத்த, ராமருக்குக் கோபம் வந்து விட்டது. அப்பொழுது ராமர் தமது சிறந்த

பாணங்கள் சிலவற்றால் ராவணனை அடிக்க, இந்திரனது வஜ்ராயுதத்திற்கும் அசையாத ராவணன், தனது வில்லைப்பிடிக்கத் திறமின்றித் தயங்கி நின்றான். அப்பொழுது ராமர் நினைத்தால், அவனைக் கொன்றிருக்கலாம். அவ்வாறு செய்யாது ராமர் அவனை நோக்கி, 'ஏ துராத்மா! இன்றையதினம் வானரர்களோடு சண்டை செய்து நீ சோர்ந்து போய்விட்டாய். இப்பொழுது உன்னை ஜயிப்பது ந்யாயம் என்று எனக்குத் தோற்றவில்லை. நாளை நமது திறமையை நீ நன்றாய்க் காணலாம். ஒரு வேளை ஸீதையை நீ என்னிடம் நாளை கொண்டுவந்து விட்டுவிடுவாயானால், நான் உடனே சண்டையை நிறுத்திவிடுகிறேன். நீ இப்பொழுது வீட்டுக்குப்போய் இரவை ஸுகமாய்க் கழித்துவிட்டு நாளை இங்கு வா' என்று மிகுந்த கருணையோடு சொன்னார். ராவணன் அவமானத்துடன் தலையைக் குனிந்துகொண்டு லங்கையுட் ப்ரவேசித்தான்.

வினா 32.—இரவில் ராவணன் ஸ்திதி என்னவாயிருந்தது? அப்பொழுது அவன் மறுநாள் யுத்தத்திற்கு என்ன ஏற்பாடு செய்தான்?

விடை.—ராவணனுக்கு வெட்கத்தோடு பயமும் உண்டாய்விட்டது. அவனது திக்விஜய காலத்தில், அவன் ஸம்பாதித்துள்ள சாபங்கள் யாவும் (இவைகளின் விவரத்தை உத்தரகாண்டத்தில் காண்க) ஞாபகம் வர, அவனுக்குப் பயம் அதிகரித்தது. ராமரே தனக்கு யமன் என்ற எண்ணமும் தோன்றிவிட்டது. அப்பொழுது தனது தம்பி கும்பகர்ணனை எழுப்பி வந்து, மறுநாள் சண்டைக்கு அனுப்பி எப்படியாவது

ராமலக்ஷ்மணர்களைக் கொன்று விடவேண்டும் என்ற திர்மானம் அவனுக்கு உண்டாயிற்று. அப்பொழுது அநேக ராக்ஷஸர்களைக் கூப்பிட்டுத் தகுந்த உணவு பதார்த்தங்களாகிய மாம்ஸாதிகளைக் கொண்டுபோய் வைத்துக்கொண்டு கும்பகர்ணனை எப்படியாவது எழுப்பி வரும்படி உத்தரவு செய்தான்.

வின 33.—கும்பகர்ணனை ராக்ஷஸர்கள் எவ்வாறு எழுப்பினர்? அவன் பின்பு என்ன செய்தான்?

விடை —கும்பகர்ணன் தூங்கும் சோம்பற்சாவடியில், ராக்ஷஸர்கள் மாம்ஸாதி உணவுகளையும், ரத்தம் முதலிய பானவிஷயங்களையும் கொண்டுபோய் வைத்துவிட்டு, எல்லோரும் கும்பகர்ணனை எழுப்பத் தலைப்பட்டனர். எவ்வளவோ விதமான சப்தங்கள் முதலிய தந்த்ரங்களை உபயோகித்தும், அவன் எழுந்திராதது கண்டு, அவனை அடித்தும், குத்தியும், சிற்சில பாகங்களில் வெட்டியும் பார்த்தனர். இதுவும் பயன் படாதது கண்டு, கடைசியாய் 1000-யானைகளை அவன் பேரில் ஓட்டிவிட, அவன் சோம்பல் முறித்து கொஞ்ச நாழிகையில் பெருங் கொட்டாவியை விட்டுக்கொண்டு எழுந்தான். (இவனுக்கு இப்பெருந்தூக்கம் வந்ததன் காரணத்தை உத்தரகாண்டத்தில் காண்க) எழுந்ததும், பசி பசி என்று கூக்குரல் இட்டுக்கொண்டு, வைத்திருந்த ஸகல பதார்த்த வர்க்கங்களையும் உண்டு, தூக்கம் பசி ஆகிய இவைகள் நீங்கியவனானன். வந்திருந்தவர்களின் வேண்டுகோளின்படி, ராவணனிடம் வந்து, நடந்திருந்த ஸமாசாரங்களை அறிந்துகொண்டு, ராவணனுக்கும் முதலில் நற்புத்திகள் கூறிவிட்டு, பின்பு ராமலக்ஷ்மணர்களைக் கொன்றே, திரும்பி வருவதாக

யுள் வருவதாகச் சொல்லிக்கொண்டு, மறுநாட் காலை யில் கும்பகர்ணன் அநேக ராக்ஷஸர்களோடு ராமரதி களை எதிர்த்துப் போர் செய்யப் புறப்பட்டான்.

வின 34.—கும்பகர்ணன் வாநரர்களோடு எவ் வாறு யுத்தம் செய்தான் ?

விடை.—கும்பகர்ணன் யுத்தத்திற்குப் புறப்பட் டதும் அநேக ராக்ஷஸ வீரர்கள் அவனோடு யுத்தத் திற்குப் புறப்பட்டனர். அவன் யுத்தகளம் வந்ததும், வாநரர்களோடு கோரயுத்தம் செய்து, கையில் அகப் பட்டவர்களை வாயில் போட்டுக்கொண்டு விழுங்கத் தொடங்கினன். இதைக்கண்ட வாநரர்களுக்கு மிகு ந்த பயம் உண்டாக, அவர்கள் யுத்தகளத்தை விட்டு ஓடத்தலைபபட்டனர். அங்கதன் வாநரர்களைத் தைர் யப்படுத்தி நிறுத்திவிட்டான். அப்பொழுது எல்லா வாநர ச்ரேஷ்டர்களும், கும்பகர்ணனை எதிர்க்க வர, ஹநுமாருக்கும அவனுக்கும் சண்டை யுண்டாயிற்று. அதில் கும்பகர்ணன்முதலில் மொத்துண்டபோதிலும், முடிவில் ஹநுமானை அவன ரத்தம் கக்கும்படி அடி த்துவிட, அவனை நீலன் முதலிய வாநர ச்ரேஷ்டர்கள் எதிர்த்தனர். இந்த யுத்தத்தில் கையிலகப்பட்ட குரங்கு களை எல்லாம் கும்பகர்ணன் பிடித்துத் தின்னத்தொட ங்க, வாநர ச்ரேஷ்டர்கள் எல்லோரும் ராமரைச் சர ணம் அடைந்தனர். உடனே அவன் அங்கதனை எதிர் த்து, அவனை மூர்ச்சைபோய் விழும்படி செய்துவிட ஸுக்ரீவன் பெரிய கற்பாறையைக் கும்பகர் ணன்மேல் எறிந்தான். அது அவன் மார்பில் பட்ட தும் பொடிப்பொடியாகிக் கீழே விழுந்ததே ஒழிய அவன் ஒன்றும் செய்யவில்லை. இதைத் தாங்கி

கொண்டு, அவன் ஸுக்ரீவனை உத்தேசித்து ஒருபெரிய ஆயுதத்தைவிட, அதை ஹநுமார் கையில் பிடித்து முறித்து எறிந்துவிட்டார். தன் ஆயுதம் வீணானது கண்டு, ஒரு பெரிய மலைச்சிகரத்தால் கும்பகர்ணன் வெகு வேகமாய் ஸுக்ரீவனை அடிக்க அவன் ப்ரக்ஞை தவறிப்போய்க் கீழே விழுந்தான். உடனே கும்பகர்ணன் அவனைச் சிறைபிடித்துக்கொண்டு லங்கையுட் ப்ரவேசித்தான். வாநரஸேனையில் அப்பொழுது பெருங் குழப்ப முண்டாயிற்று.

வினா 35.—ஸுக்ரீவன் எவ்வாறு தப்பித்துக் கொண்டான்?

விடை.—ஸுக்ரீவனை விடுவித்துவிடலாம் என்று தோன்றிய ஹநுமாருக்கு, அவ்வாறு செய்தால் ஸுக்ரீவரை அவமானம் செய்ததாகும் என்று வேறு எண்ணமும் தோன்ற, அவ்வாறு செய்யாது வாநர ஸேனைகளைத்தேர்யப்படுத்திக்கொண்டு, ஸுக்ரீவனதுவரவை ஒவ்வொரு க்ஷணத்திலும் மிகுந்த ஆவலோடு எதிர் பார்த்திருந்தார். லங்கா பட்டணத்து வீதியில் கும்பகர்ணன் போகையில், ஸுக்ரீவனுக்கு உணர்ச்சி வர, அவன் நன்றாய் யோசனை செய்ததன்பேரில், கும்பகர்ணன் கையிலிருந்தபடி, தனது நகம் பற்கள் முதலியவைகளால் அவனது காதையும் மூக்கையும் கிழித்து, அவன் விலாப்புறம் பிளக்கும்படி உதைத்தான். அப்பொழுது வலி பொறுக்கமுடியாமல், கும்பகர்ணன் ஸுக்ரீவனைக் கீழேவிட்டு, தன் பலம் எல்லாவற்றையும் வைத்து, அவனை நசுக்கப் பார்த்தான். ஸுக்ரீவன் பந்தைப்போல் அவன் கையிலிருந்து தப்பி, ஆகா

யுத்தில் கிளம்பி தனது ஸேனையிருந்த இடம் வந்து வானரர்களைத் தேற்றினன்.

வினு 36.—பின்பு கும்பகர்ணன் யுத்தம் எவ்வாறு நடந்து முடிவு பெற்றது?

விடை.—இவ்வாறு ஸுக்ரீவன் தன் கையை விட்டுத் தப்பிவிட்ட உடன், கும்பகர்ணன் யுத்தகளம் வந்து, மறுபடியும் போர்செய்யத் தொடங்கினன். யுத்த வெறியில் வானரர்களைத் தின்னுவதோடு அநேகம் ராக்ஷஸர்களையும் பேதாபேதமின்றி விழுங்கத் தொடங்கினன். இவ்வாறு யமன்போல வந்த ராவணன் தம்பியைக் கண்டதும், வானரர்கள் மறுபடியும் ராமரிடம் சென்று சரணமடைந்தனர். இதைக்கண்டதும் லக்ஷ்மணர் கும்பகர்ணனை வந்து எதிர்த்தார். அப்பொழுது கும்பகர்ணன், லக்ஷ்மணரை ஒரு சிறு பிள்ளையாக எண்ணி அலக்ஷ்யம் செய்துவிட்டு, ராமரிடம் சண்டைக்குவந்து நின்றான். அப்பொழுது ராமர், விபீஷணர், லக்ஷ்மணர் முதலியவர்களிடமிருந்து கும்பகர்ணனது பலவிசேஷங்களைத் தெரிந்துகொண்டு, அவனோடு யுத்தம் செய்யத் தொடங்கினர். அப்போது வாலியைக் கொன்று திரும்பிய பாணத்தை ராமர்விட,கும்பகர்ணனுக்குக் கொஞ்சம் பலம் குறைந்தது. உடனே அவன் ஒரு பெரிய கதாயுதத்தைச் சுழற்றி விடத் தொடங்க, இதைக் கண்டு ராமர் அவன் கையை வாயவ்யாஸ்த்ரத்தால் வெட்டிவிட்டார். அவன் கைவிழுந்த இடத்திலிருந்த அநேகம் வானரர்கள், உடனே உயிர் விட்டு விழுந்தனர். பின்பு கும்பகர்ணன் ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கிக்கொண்டு தம்மை அடிக்க வருவதைக் கண்ட ராமர், சில பாணங்களுதல் அவனது காலை

வெட்டிவிட்டு, அவன் வாலையும் பாணங்களாலே நிறைத்துவிட்டார். அப்பொழுதும் கும்பகர்ணன் உருண்டுகொண்டு வாநரர்களை அழிப்பதைக்கண்டு, ராமர் ஐந்த்ராஸ்த்ர ப்ரயோகஞ்செய்து, கும்பகர்ணனது தலையைக்கொய்து அவனைக் கொன்றார்.

வினா 37.—கும்பகர்ணன் இறந்ததும், ராவணன் என்ன செய்தான்? அவன் ப்ரயத்நம் எவ்வாறு முடிந்தது?

விடை.—கும்பகர்ணன் இறந்த ஸங்கதியைக் கேட்டதும், ராவணன் ஒன்றுந் தோன்றாது திக்ப்ரமை பிடித்தவன் போலானான். ஒன்றும் தோன்றாது இருக்கும் தமது தகப்பனை நோக்கி, த்ருசிரஸ், தேவாந்தகன், நராந்தகன், அதிகாயன் முதலியவர்கள் தாம் சண்டைக்குப் போவதாகச் சொல்லி, அவனைத் தைர்யப்படுத்திவிட்டு, அவர்கள் மஹோதரன் முதலிய ஸேனைத்தலைவர்கள் வாய்ந்த மிகுந்த ராக்ஷஸ ஸேனைகளோடு, சண்டைக்குப் புறப்பட்டனர். கோரயுத்தம் நடந்ததில் கொஞ்ச நாழிகைக்கெல்லாம், நராந்தகனை அங்கதனும், மஹோதரனை நீலனும், த்ருசிரஸை ஹநுமாரும் கொன்று தீர்த்தார்கள். அப்பொழுது ராவணன் குமாரனாகிய அதிகாயன், வாநரஸேனையை எதிர்த்துச் சண்டைக்கு வந்தான். அவன் சண்டைசெய்து அநேக வாநரர்களை மாய்த்துவிட்டு, ராமரிடம் சண்டைக்குப் புறப்பட்டான். அப்பொழுது லக்ஷ்மணர், அதிகாயனைப் போருக்கழைத்தார். அதிகாயன் லக்ஷ்மணரை சிறுபிள்ளை என்று பரிஹாஸம் செய்ய, அவர் அதிகாயன்மேல் பாணத்தைப் போட்டார். அப்பொழுது இருவரும்கைகலந்தனர். இந்தச்சண்டையில்,

முதலிலேயே லக்ஷ்மணர் அதிகாயனைப் பிரமிக்கும்படி அடித்து விட்டார். கொஞ்ச நாழிகை இருவரும் ஸ்ர யுத்தம் செய்தபின்பு, லக்ஷ்மணர் முடிவில் பிரம்மாஸ்திரத்தால் அதிகாயன் தலையை அறுத்துவிட்டார்.

வினா 38.—இதன் பின்பு ராவணன் நிலை என்னமாயிற்று? அப்பொழுதும் யார் அவனை எவ்வாறு தைரியப்படுத்தியது?

விடை.—இந்த ஸமாசாரத்தைக் கேட்டதும், ராவணனுக்குப் பழைய கஷ்டங்கள் யாவும் ஞாபகம் வந்து விட்டது. மிகுந்த துக்கத்துடன், ராவணன் தன் ஸபையை விட்டுவிட்டு, தன் சயனக்கிரஹம் சென்று படுத்துக்கொண்டான். அப்பொழுது, இந்திரஜித்து, தன் தகப்பன் துக்கத்தை ஒருவாறு தேற்றி, தானே சண்டைக்குப்போய் ராம லக்ஷ்மணரை மறுபடி கட்டிப்போட்டுவிட்டு வருவதாகத் தைர்யம் சொல்லிவிட்டு, யுத்தத்திற்குப் புறப்பட்டான். உடனே அநேக ராக்ஷஸ ஸேனைகள் அவனைச் சூழ்ந்து, மிகுந்த உத்ஸாகத்தோடு புறப்பட்டன. ராவணனும் ஒருவாறு துக்கம் தெளிந்து, தனது ராஜஸபை வந்து சேர்ந்தான்.

வினா 39.—இந்திரஜித்து எவ்வாறு யுத்தம் செய்தான்? அது எவ்வாறு, முடிவு பெற்றது?

விடை.—இந்திரஜித்து யுத்தகளம் வந்து, வானரர்களை எல்லாம், முன் ஒரு தரம் வருத்தியதுபோல வருத்தினான். அப்பொழுது ஒருவராலும் அவனை எதிர்த்துச் சண்டைசெய்ய முடியாமல்போக, யாவரும் பின்னடைந்தனர். இவ்வாறு எல்லோரையும் ஜயித்து, இந்திரஜித்து ராமலக்ஷ்மணரோடு யுத்தத்திற்கு வந்து, அவர்களோடு கொஞ்சகாலம் சண்டை செய்துவிட்டு, பின்பு

அன்று சாயங்கால வேளையில், அவன் தன் மாயையில் மறைந்துகொண்டு, ராமலக்ஷ்மணருள்பட வானரர்கள் எல்லோரையும் ப்ரம்மாஸ்திரத்தால் தாக்கத் தொடங்கினன். ப்ரம்மாஸ்திரத்திற்கு மரியாதை செய்ய எண்ணி, ராமலக்ஷ்மணர் அந்த அஸ்திரத்தின் கட்டிற்கு உள் பட்டு, ப்ரஜ்ஞை தவறிச் செயலற்றுக் கீழே விழுந்தனர். வானரசேனை எல்லாம், இந்திரஜித்தின் அஸ்திர விசேஷத்தால் செயலற்று, மர்மஸ்தானங்களில் தைத்திருந்த அம்புகளால் உண்டாகும் வலி பொறுக்க முடியாது கீழே விழுந்தன. இவ்வாறு வானரர்களையும் ராமலக்ஷ்மணரையும் யுத்தகளத்தில் கட்டிப்போட்டுவிட்டு, இந்திரஜித்து அன்றிரவு லங்கை புகுந்து, தான் செய்து வந்த அதிசயச் செயல்களை ராவணனிடம் சொல்ல, அவன் மிகுந்த ஸந்தோஷத்தை அடைந்தான்

வின 40.—ராமலக்ஷ்மணரை விடுவிக்க யார் எவ்வாறு பிரயத்தனம் செய்தது?

விடை.—ப்ரம்மாஸ்திரத்தினல் கட்டுப்படாத ஹனுமாரும், விபீஷணரும் வானரர்களைத் தேற்றிக் கொண்டும், திடீரென்று இவர்களை இவ்வாறு செயலற்று விழும்படி செய்த இந்திரஜித்தின் மாயையை வியந்துகொண்டும், கண்களில் பாணம் தைத்து விழிக்கமாட்டாமல் கஷ்டப்படும் ஜாம்பவானிடம் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது ஜாம்பவானேடு விபீஷணர் பேச, ஜாம்பவான், 'ஹனுமார் எங்கே? உயிரோடிருக்கிறாரா' என்று விசாரிக்க, 'எல்லோரையும் கவனியாது ஹனுமாரை மாத்திரம் ஏன் விசாரிக்கவேண்டும்?, என்று விபீஷணர் கேட்டார். அப்பொழுது ஜாம்பவான், 'ஹனுமார்' உயிரோடிருந்தால், வானரர்கள், ராம

துக்கொண்டு, ஸீதையை ஒரே வீசாய் வீசிவிடவேண்டும் என்று வெகு வேகமாய் அசோகவனத்தை நோக்கி ஓடத்தொடங்கினன். யார் சொல்லியும் அவன் நிற்கவில்லை. இப்படி ராவணன் வருவதைக்கண்டு ஸீதை, அவன் ராமலக்ஷ்மணரைக் கொன்றுவிட்டு தான் இணங்காததால், தன்னையும் கொல்ல வருகிறான் என்று எண்ணிப் பயந்தாள்.

வினா 51.—யார் ராவணனை இக்கொடிய செயலைச் செய்யாதிருக்கும்படி எவ்வாறு தடுத்தது? பின்பு ராவணன் என்ன செய்தான்?

விடை.—இவ்வாறு ராவணன் கோபாவேசத்தால் ஒருவர் சொல்லியதையும் கேட்காது, பைத்தியம் பிடித்தவன்போல் ஸீதை இருக்கும் இடத்தை நோக்கிப் போகும்பொழுது, அவன் பிராண ஸ்நேகிதனை சுபார்சுவன் என்பவன் "ஸ்திரீகளை எப்பொழுதும் கொல்லலாகாது. மேலும் ஸீதையிடம் நீ என் அநாவசியமாய்க் கோபித்துக் கொள்ளவேண்டும். அவள் உறவினராகிய ராமலக்ஷ்மணர் தானே, இந்திரஜித்து முதலியவர்களைக் கொன்று, உனக்கு இந்த துக்கத்தை விளைவித்திருக்கிறார்கள். ஆகையால் நீ ஆண்மை உடையவனாய் இருந்தால், உன் கோபத்தை அவர்கள் மேல் அல்லவா காட்டவேண்டும்? கேவலம் மஹா பயந்தவர்களாகிய ஸ்திரீகள்மேல் காட்டுவது ஆண்மைக்கு அழகன்று" என்று புத்திமதி கூற, உடனே ராவணன், தானே மீதி இருக்கும் ராக்ஷஸஸேனை, வீரர்கள் முதலியவர்களால் சூழப்பட்டு, ராமரோடு யுத்தம் செய்யப் புறப்படுவதாகத் தீர்மானித்தான்.





வினு 52.—ஸீதையைக் கொல்லாது திரும்பியதும், ராவணன் வானரரோடு சண்டைசெய்ய எவர்களை அனுப்பினன்? சண்டை எவ்வாறு நடந்தது?

விடை.—ராவணன் அசோக வனத்திலிருந்து திரும்பி வந்ததும், தன் மூதாதைகள் சேர்த்து வைத்திருந்த சிறந்த ராக்ஷஸ ஸேனைகளை அன்று வானரர்களோடு சண்டைசெய்யப் போகும்படி ஏவி, தான் மறுநாள் சென்று ராமலக்ஷ்மணனை மாத்திரம் கொன்றுவிடுவதாகத் தீர்மானித்தான். உடனே இந்தப் பழைய ஸேனை கோடிக்கணக்கான அங்கங்களோடு வானரர்மேல் விழுந்து, அவர்களை அழிக்கத் தொடங்க, வானரர்கள் இந்த ஸேனையின் வேகத்தைத் தாங்கமுடியாமல் ராமரைச் சரணம் அடைந்தனர். உடனே ராமர் தமது வில்லை எடுத்துக்கொண்டு, வெகு கோரமாக யுத்தம் செய்து, இடம்விட்டு இடம் அதிவேகத்தோடு சுற்றிக் கொண்டே எல்லா ராக்ஷஸ வீரர்களையும் அழித்து வந்தார். அப்பொழுது ராமர் இன்ன இடத்திலிருந்து அடிக்கிறார் என்று ராக்ஷஸர்களுக்குத் தெரியவில்லை. இவர்கள் இவ்வாறு தத்தளித்துக் கொண்டிருக்கையில், ராமர் மஹா மோஹனுஸ்திரமாகிய காந்தர்வாஸ்திரத்தையும் பிரயோகம் செய்து விட்டார். அப்பொழுது ஒவ்வொரு ராக்ஷஸனுக்கும் மற்றவன் ராமராகத் தோன்றும்படியான பிரமை உண்டாய் விட்டது. ஆகையால் ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்ள, கூடிய சீக்கிரத்தில் கோடிக்கணக்காய் வந்த ராக்ஷஸ ஸேனைகள் எல்லாம் மாண்டன. இவ்வாறு ருத்ர அம்சத்தால் ராமர் எல்லோரையும் வெட்டிச்சாய்த்துவிட, இதில் தப்பிப் பிழைத்த சிலர் ராவணனிடம் சென்று நடந்த ஸங்கதியைத் தெரி

லக்ஷ்மணுள் யாவரும், எளிதில் பிழைத்தெழுவார்கள். இல்லாவிடில், எல்லோரும் இவ்வாறே இறக்க வேண்டியதுதான்.' என்று மறுமொழி கூற ஹநுமார் தான் வந்திருப்பதைத் தெருவித்துக்கொண்டார். உடனே ஜாம்பவான் ஹநுமாரை நோக்கி, 'அப்பா வடக்கே ஹிமவத்கிரி பர்வதத்தருகில், ஸஞ்சீவி பர்வதம் என்றொரு மலை இருக்கிறது. அதன் உச்சியில் நான்கு ஸஞ்ஜீவிக் கொடிகள் இருக்கின்றன. அவைகளை நீ கொண்டுவந்து, ராமலக்ஷ்மணுள் முதலியோர்கள்மேல் படும்படி செய்தால், எல்லோரும் பிழைப்பார்கள். இன்றிரவிற்குள் இந்தக் கஷ்டமான காரியத்தை ஸாதிக்கவல்லவன் நீயே,' என்று துதித்தார்.

வினு 41.—அப்பொழுது ஹநுமார் எவ்வாறு வானரசேனையைப் பிழைப்பு மூட்டி பின்பு என்ன செய்தார்?

விடை.—உடனே ஹநுமார் தன் உருவத்தைப் பெரியதாக்கிக்கொண்டு, ஸமுத்திரத்தை அலக்ஷியமாய்க் கடந்து, வாயுவேக மனோவேகமாய் ஸஞ்சீவி பர்வதத்திற்கு வந்து, ஜாம்பவான் குறிப்பிட்ட கொடிகளைத் தேடிப் பார்த்தார். பர்வத ராஜனையும் அப்பொழுது பிரார்த்தித்துப் பார்த்தார். ஒரு விதத்திலும் அவைகளைக் கண்டுபிடிக்க முடியாமையால், அந்த மலையையே வேரோடு பிடுங்கி, வெகு அட்டஹாஸத்தோடு கையில் எடுத்துக் கொண்டு அதிவேகமாய் ஸமுத்திரத்தைக் கடந்து, ஹநுமார் லங்கை அன்றிரவே வந்து விட்டார். அந்தக் கொடிகளின் காற்றும், ஸ்பர்சமும் ராமலக்ஷ்மணுள் வானரர்கள் முதலியவர்களுக்கு ஏற்பட்ட மூர்த்திரத்தில், அதுவரையில் இறந்திருந்தவர்கள், சௌபஸ்

மிருந்தவர்கள், யாவரும் தூங்கி விழித்தவர்போல் எழுந்தார். ராக்ஷஸ ஸேனையில் இறந்தவர்கள், அப்போதைக்கப்போது ஸமுத்திரத்தில் எறியப்பட்டமையால், அவர்களில் ஒருவரும் அப்பொழுது பிழைக்கவில்லை. இவ்வாறு வானரர்கள் முதலிய யாவரையும் எழுப்பிவிட்டு, ஹனுமார் ஸூர்ய உதயத்துக்கு முன், ஸஞ்ஜீவி மலையை இருந்த விடத்தில் வைத்து விட்டு லங்கை வந்து சேர்ந்து விட்டார். **பக்தியால் ஸாதிக்க முடியாத காரியம் உலகில் இல்லை.**

வினு 42.—இவ்வாறு வானரர்கள் எழுந்ததும் அவர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—ராமலக்ஷ்மணரும் எழுந்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்டதும், அன்றிரவே கொள்ளிக்கட்டைகளை எடுத்துக்கொண்டு, லங்கையைக் கொளுத்தி விடும்படி ஸுக்ரீவன் வானரர்களுக்கு உத்திரவு கொடுத்தான். உடனே வானரர்கள் அவ்வாறு செய்ய, லங்கை எரியத்தொடங்கியது. முன்னமேயே ஹனுமார் ஸஞ்ஜீவி பர்வதத்தை எடுத்துவந்த சமயத்தில், இலங்கையுள் உண்டாயிருந்த குழப்பமானது இப்பொழுது அதிகரிக்க, அநேக ராக்ஷஸர்களும் அவர்களது ஸ்திரீகளும் மாளும்படியாக வந்தது.

வினு 43.—நெருப்பு ஒருவாறு தணிந்ததும் ராவணன் யுத்தவிஷயமாய் என்ன ஏற்பாடு செய்தான்? அது எவ்வாறு முடிந்தது?

விடை.—நெருப்புத் தணிந்து வருகையில், ராமலக்ஷ்மணர் தனுஷ்டங்காரம் செய்தனர். இதைக் கேட்டதும் ராவணன், கும்பகர்ணனது பிள்ளையாகிய கும்பன், நிகும்பன் ஆகிய இவர்களை, அநேக ராக்ஷஸ

ஸேனைகளோடு வானரர்களை எதிர்த்துச் சண்டைக்குப் போகும்படி அனுப்பினான். கும்ப நிகும்பரோடு வந்த சில ராக்ஷஸ வீரர்களை, அங்கதன் வெகு லகுவாய் ஸம்ஹரித்தான். அப்பொழுது கும்பனுக்கும் அங்கதனுக்கும் சண்டை உண்டாகி, அதன் முடிவில் அங்கதன், கும்பனால் அடிபட்டு மூர்ச்சையாக விழுந்தான். இது போலவே அவனுக்கு ஸஹாயமாய் வந்த மைந்தத்விதானும் அடிபட்டு விழுந்ததைப் பார்த்திருந்த ஸுக்ரீவன் ஓடி வந்து, கையை இறுக்கி மூடிக்கொண்டு வெகு கொடுமையாய்க் கும்பனைக் குத்திக்கொன்றான். இவ்வாறு கும்பன் இறந்ததும், நிகும்பனுக்கு யுத்த ஆவேசம் வந்து விட, அவனை ஹநுமார் எதிர்த்துக் கீழே தள்ளிக் காலால் தேய்த்துக்கொன்று விட்டார். இந்த ஸங்கதிகளைக் கேள்விப்பட்ட ராவணன், கரனது பிள்ளையாகிய மகராக்ஷஸனைப் போருக்கு அனுப்ப, அவன் தன் தகப்பன் முதலியவர்களை ஜனஸ்தானத்தில் கொன்ற ராமரிடம் சண்டைக்கு வந்து அவரோடு விசித்திர யுத்தம் செய்து, முடிவில் ராம பாணத்தால் மாண்டான்.

வினா 44.—இவ்வாறு தான் அனுப்பிய வீரர்கள் இறந்ததும், ராவணன் யுத்தத்திற்கு யாரை அனுப்பினான்? அவன் என்ன செய்தான்?

விடை.—ராவணன் மறுபடியும் இந்திரஜித்தை யுத்தத்திற்கு அனுப்ப, அவன் முன்போலவே மறைந்திருந்து வானரர்களோடு யுத்தம் செய்யத் தொடங்கினான். ஆனால் ராமலக்ஷ்மணர், இந்திரஜித்து ஒளிந்திருந்த இடத்தைத் தம்மிடம் திரும்பிவரும் பாணங்களில் காணப்படும் இரத்தக்கறைகளால், ஒருவாறு

அறிந்து, அந்த விடத்தை நோக்கிக் குறிப்புவைத்து அடிக்கத் தொடங்க, இந்திரஜித்திற்கு மறைந்து யுத்தம் செய்ய முடியாமல் போய்விட்டது.

வினா 45.—அப்பொழுது இந்திரஜித்து என்ன தந்திரம் செய்தான்?

விடை.—இவ்வாறு ராமலக்ஷ்மணனை ஜயிக்கத் தன்னால் முடியாமல்போன இந்திரஜித்து, மாயா ஸீதை ஒருவளை உண்டாக்கித் தனது ரதத்தில் வைத்துக் கொண்டு, ஹனுமார் முதலிய வானர சிரேஷ்டர்கள் யுத்தம் செய்யும் இடம் சென்று, அவர்கள் முன்னிலையில், அவர்கள் எவ்வளவு விதமாகச் சொல்லியும் கேட்காமல், மாயாஸீதையின் தலைமயிரைப் பிடித்துக் கொண்டு அவள் தலையை வெட்டிக்கீழே எறிந்துவிட்டு, தான் லங்கையுட் பிரவேசித்து விட்டான்.

வினா 46.—இந்திரஜித்து ஏன் இவ்வாறு செய்தான்? இதன் பின்பு லங்கையுள் அவன் என்ன செய்தான்?

விடை.—தன்னால் ராமலக்ஷ்மணனை ஜயிக்கமுடியாமல் போனதும், தான் முந்தி அரைகுறையாய் விட்டிருந்த நிகும்பிலை வனத்திற் செய்த யாகமும், அதன் முடிவில் வரும் ரதம் முதலியவைகளின் மகிமைகளும், அவன் ஞாபகத்தில் வர, உடனே தான் வானரர் முதலியோரது தடைகள் இன்றி யாகத்தைப் பூர்த்தி செய்வதற்காக, இம்மாதிரி மாயா ஸீதையை வெட்டி, அவர்களையும் ராம லக்ஷ்மணனையும் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும்படி வெகு தந்திரமாய்ச் செய்துவிட்டான். இந்திரஜித்து லங்கை சென்றதும், அநேக ராக்ஷஸ வீரர்களையும் நிகும்பிலை வனத்தைச்சுற்றி நிறுத்திவிட்டு,

அந்த வனத்துள் யாகத்தை நிர்ப்பயமாய்த் தொடங்கி விட்டான். (இந்த யாகத்தைப்பற்றிய விஷயங்களை, **உத்தரகாண்டத்தில்** காண்க).

வி௵ 47.—ராமருக்கு இந்த ஸங்கதி தெரிந்த உடன் அவர் என்ன செய்தார்? அப்பொழுது அவரை யார் எவ்வாறு தேற்றியது?

விடை.—ஹனுமார் முதலிய வானரர்களுக்கு மாயாஸீதை வெட்டுப்பட்டு விழுந்ததைக் கண்டதும் யுத்தம்செய்ய மனம் எழவில்லை. தேகம் தளர்ந்துபோய் துக்கம் மேலிட, ஹனுமார் ஓடோடியும் வந்து, தாம் கண்டதை ராமருக்குத் தெரிவித்தார். இதைக் கேட்டதும், ராமர் மூர்ச்சைபோட்டு விழுந்தார். லக்ஷ்மணர் தம்மாலியன்றமட்டும் ராமரைத் தேற்றப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருக்கையில், விபீஷணர் ஓடி வந்து, இந்திரஜித்தின் தந்திரத்தையும் மோசக்கருத்தையும் வெளியிட்டு, யாகம் முடிவதற்கு முன் அவனை லக்ஷ்மணர் சென்று கொல்லாவிடில், பின்பு அவனை ஒருவராலும் ஜயிக்க முடியாது என்று சொல்ல, ராமர் ஒருவாறு தேறி, லக்ஷ்மணரைப்போய் இந்திரஜித்தைக் கொன்று வரும்படி உத்தரவு கொடுத்தார்.

வி௵ 48.—யார் யார் இந்திரஜித்தைக் கொல்லும் விஷயத்தில் போய், என்னென்ன செய்தார்கள்?

விடை.—விபீஷணர், ராமர் அனுமதியின் பேரில், லக்ஷ்மணரை இந்திரஜித்து யாகம் செய்துகொண்டிருந்த நிகும்பலை வனத்திற்கு அழைத்துப்போக, அவரோடு ஹனுமாரும் அநேக வானரர்களும் புறப்பட்டார்கள். அந்த வனத்தருகில் சென்றதும், அங்கு காவலாயிருந்த ராக்ஷஸர்களை, வானரர்கள் எதிர்த்துப் போர்

செய்யத் தொடங்கினர். இவ்வாறு ராக்ஷஸர்களுக்கு வேலை உண்டானதில், ஹனுமார் லக்ஷ்மணரைத் தமது தோளில் தூக்கிக்கொண்டும் விபீஷணனை முன்னிட்டுக் கொண்டும் ராக்ஷஸ ஸேனையைச் சிதற அடித்து விட்டு நிகும்பிலை வனத்துள் பிரவேசித்தார். அங்கு இந்திரஜித்து யாகம் செய்துகொண்டிருப்பதை, விபீஷணர் லக்ஷ்மணருக்குக் காட்டி அவனை வலுவில் போருக்கு இழுத்து யாகம் முடிவதற்குமுன் கொன்று விடும்படி தந்திரம் சொல்லிக் கொடுத்தார்.

வினு 49.—அப்பொழுது நிகும்பிலை வனத்தருகில் யுத்தம் எவ்வாறு நடந்து முடிவுபெற்றது?

விடை.—இந்திரஜித்தைக் கண்டதும், லக்ஷ்மணர் அவனை வாயில் வந்தபடி பரிகசித்தார். உடனே அவர்கள் இருவருக்கும், அந்த யாகமண்டபத்தில் போர் தொடங்கிற்று. அந்தச் சண்டையில் லக்ஷ்மணரோடு வந்த வானரர்களும் ஹனுமாரும் தம்மாலியன்றமட்டும் இந்திரஜித்தின் குதிரை தேர் முதலியவைகளை அழித்து ஸஹாயம் செய்தனர். அப்படி இருந்தும், லக்ஷ்மணருக்குக் கோரயுத்தம் நடந்து கொண்டிருக்கையிலேயே சிரமம் தட்ட, அதையறிந்த விபீஷணர் நல்ல சமயத்தில் இந்திரஜித்தோடு சண்டைக்கு வந்து நின்றார். அப்பொழுது இந்திரஜித்து தன் சிற்றப்பனை நம்பிக்கைத் துரோஹி என்று பலவாறாக இகழ்ந்து பேச, இருவருக்கும் போர் உண்டாயிற்று. 'இதன் முடிவில், தான் இந்திரஜித்தைக் கொல்லாது, லக்ஷ்மணராலேயே அவனை மாய்ப்பதாகச் சொல்லி யுத்தம் செய்யாது திரும்ப, இதற்குள் களைப்பு நீங்கிய லக்ஷ்மணர் ஹனுமாரின் மீது ஏறிக்கொண்டு இந்திரஜித்தை வந்து எதிர்த்தார்.

இந்திரஜித்து ஹனுமானை அடிக்கத் தொடங்க, அவர் லக்ஷ்மணரைக் கீழே இறக்கிவிட்டு, இந்திரஜித்து பூமியிலேயே நிற்கும்படி அவன் ரதம் முதலியவைகளைப் பொடிப் பொடியாகச் செய்து விட்டார். இவ்வாறான தும் இந்திரஜித்து லங்கையுட் சென்று, வேறு ரதத்தில் ஏறிக்கொண்டு லக்ஷ்மணரோடு சண்டைக்கு வந்தான். அப்பொழுது இருவரும் திவ்ய அஸ்திரங்களைப் பிரயோகித்து ஒருவருக்கு ஒருவர் தாழ்வின்றிச் சிலகாலம் போர் புரிந்தனர். இதன் முடிவில் லக்ஷ்மணர் ஐந்திராஸ்திரத்தைப் பிரயோகம் செய்து இந்திரஜித்தின் தலையை அறுத்து விட்டார். ராக்ஷஸர்கள் யுத்தகளத்தை விட்டுப் பயந்து ஓடிப்போய் விட்டார்கள். லக்ஷ்மணரும் ராமரிடம் வந்து சேர்ந்தார்.

வின 50.—இவ்வாறு இந்திரஜித்து இறந்ததும், இருதிறத்தாரும் என்ன செய்தார்கள்?

விடை.—இந்திரஜித்தின் யுத்தத்தில் மிகுதியாய்க் காயப்பட்டு, அவைகளைக் கவனியாது ஸந்தோஷமாய் வந்திருக்கும் லக்ஷ்மணரை, ராமர் இறுகத்தழுவி விட்டு, அவரது காயங்களை ஆற்றும்படி ஸுஷேணன் என்ற வானர வைத்தியனுக்கு உத்தரவு செய்தார். உடனே தன்னிடம் இருந்த மருந்துகளைக் கொடுத்து ஸுஷேணன் லக்ஷ்மணரைப் பழைய ஸ்திதிக்குக் கொண்டு வந்தான். இந்திரஜித்து இறந்த ஸமாசாரம் ராவணனுக்குத் தெரிந்தவுடன், அவனுக்குத் துக்கம் அதிகரித்துவிட்டது. வெகு நாழிகை பிரலாபித்த பின்பு, அந்தத் துக்கம் கோபமாக மாற, ஸீதையை வெட்டிவிட வேண்டுமென்று அவனுக்கு எண்ணம் உண்டாயிற்று. உடனே கோபாவேசத்தால் ஒரு கத்தியை உருவி எடுத்

விந்து விட்டார்கள். (இந்த யுத்தத்தையே தமிழ்ப் புத்தகங்களில், **மூலபலயுத்தம்** என்று சொல்வார்கள்.)

வினா 53.—இதைக் கேட்டதும் ராவணன் எவர்களால் சூழப்பட்டு யுத்தத்திற்கு எவ்வாறு புறப்பட்டான்? அப்பொழுது என்னென்ன அபசகுணங்கள் உண்டாயின?

விடை.—விரூபாக்ஷன், மஹோதரன், மஹாபார்சுவன் என்ற மந்திரி சிரேஷ்டர்களால் சூழப்பட்டு, ராமரைக் கொன்று, தன் இந்திரஜித்து கும்பகர்ணன் முதலியவர்களைக் கொன்ற பழிக்குப்பழி வாங்கி விடுவதாக ராவணன் அட்டஹாஸம் செய்துகொண்டு, புறப்பட்டான். அப்பொழுது லங்கையில், இறந்த ராக்ஷஸவீரர்களது ஸ்திரீகள் யாவரும், ராவணன் செய்த பல கொடிய காரியங்களையும் எடுத்துச் சொல்லி, அவைகளால்தான் தமக்குத் துன்பம் வந்தது என்று ராவணன் காதில் படும்படி அழுதார்கள். இன்னும் ஆகாயத்திலிருந்து ரத்த மழை பொழிதல், நரிகள் ஊளையிடுதல் முதலிய வழக்கமாய் உண்டாகும் அபசகுனங்களும் உண்டாயின. இவைகளைக் கவனியாது, ஆயுள் முடிவு காலம் அணுகிய ராவணன், வெகு உத்ஸாஹமாய் ராமனை எதிர்த்துச் சண்டை செய்வதற்காக யுத்தகளம் வந்து நின்றான்.

வினா 54.—அப்பொழுது ராக்ஷஸ வீரர்களுக்கும் வானரவீரர்களுக்கும் நடந்த யுத்தத்தின் விவரம் என்ன?

விடை.—முதலில் விரூபாக்ஷனுக்கும் ஸுக்ரீவனுக்கும் சண்டை ஏற்பட்டது. அதில் விரூபாக்ஷன் ஏறிவந்த யானையை ஒரே குத்தில் கீழேவிழுந்து இறக்கும்படி ஸுக்ரீவன் செய்ய, விரூபாக்ஷன் தன் கத்தியால் ஸுக்ரீவனை அடித்தான். இந்த அடியால், கொஞ்ச

நாழிகை ஸுக்ரீவனுக்குத் தேக உணர்ச்சிபோய்விட, பின்பு அவனுக்குத் தெளிவு உண்டாயிற்று. இவ்வாறு இருவரும் சண்டையாடி வருகையில், முடிவில் வெகு கோபத்தோடு, ஸுக்ரீவன் தன் கையால் விரூபாக்ஷனை நெற்றியில் பலமாய் இடிக்க, அவனை உதிரத்தைப்பெருக விட்டுக்கொண்டு இறந்தான். இதற்குள் மற்றைய வானரர்கள் அநேக ராக்ஷஸர்களைக் கொன்று விட்டனர். உடனே ராவணனால் ஏவப்பட்டு, மஹோதரன் ஸுக்ரீவனை வந்து எதிர்த்தான. இவர்கள் இருவருக்கும் வெகு நாழிகை கோரயுத்தம் நடந்துகொண்டிருக்கையில், முடிவில் கத்தியால் மஹோதரன் ஸுக்ரீவனை அடிக்க, அது அவனது கவசத்தில் புதைந்து விட்டது. அதை எடுக்க மஹோதரன் முயற்சிசெய்து கொண்டிருக்கையில், ஸுக்ரீவன் தன் கவசத்தில் பாய்ந்திருக்கும் கத்தியைத் தானே எடுத்து, மஹோதரன் தலையைச் சீவிக் கொன்றான். இவ்வாறு மஹோதரன இறந்த உடன் மஹாபார்சுவனுக்கும் அங்கதனுக்கும் போர் நேர்ந்தது. அதில் அங்கதன் மிகுந்த பிரயத்தனத்தின் பேரில், மஹாபார்சுவனை ஒரே குத்தாய்க் குத்திக் கொன்று விட்டான்.

வினா 55.—இவ்வாறு ராக்ஷஸ வீரர்கள் இறந்ததும், ராவணன என்ன செய்தான்? அது எவ்வாறு முடிந்தது?

விடை.—கடைசியாகத் தனது வீரர்கள் யாவரும் இறந்து விழுந்ததும், ராவணன் தானே ராமரைச் சண்டையில் எதிர்த்தான். கொஞ்ச நாழிகை ராமருக்கும் ராவணனுக்கும் ஸமயுத்தம் நடந்தது. எவ்வளவோ விசேஷமான அஸ்திரங்களை இருவரும் தயங்காது பிர

யோகம் செய்துவந்தனர். எவ்வளவுதான் ராவணன் முயன்றபோதிலும், ராமனை அவனால் யுத்தத்தில் அசைக்க முடியவில்லை. அப்பொழுது லக்ஷ்மணரும் தம்மால் இயன்றமட்டும், ராவணனது துவஜம், தேர், குதிரை, ஸாரதி முதலிய அங்கங்களை அழித்து ராமருக்குஸஹாயம் செய்தார். இப்பொழுது ராவணன், அருகிலிருந்த விபீஷணர்மேல் கோபங்கொண்டு, ஒரு பெரிய பாணத்தைவிட, அதை லக்ஷ்மணர் ஆகாயத்திலேயே அறுத்துத் தள்ளிவிட்டார். இம்மாதிரி அந்த யுத்தத்தில் ராவணனது பாணங்கள் விபீஷணர்மேல் படாதபடி, லக்ஷ்மணர் அவரைப் பாதுகாத்து வந்தார். இதைக்கண்ட ராவணனுக்கு லக்ஷ்மணர்மேல் அடங்காக் கோபம் வர மயனால் செய்யப்பட்டுத் தன்னிடமிருந்த ஒரு சக்தி ஆயுதத்தை அவர்மேல் விட்டான். அது லக்ஷ்மணரது மார்பைப் பிளந்துகொண்டு, ராமரது வைபவத்தால் ராவணனிடம் செல்லாது அவர் மார்பிலேயே தைத்துநின்று விட்டது. உடனே லக்ஷ்மணர் மூர்ச்சைபோட்டு இறந்தவர்போல் பூமியில் விழுந்தார்.

வினா 56.—இவ்வாறு லக்ஷ்மணர் செயலற்று விழுந்ததும், ராமர் என்ன செய்தார்? பின்பு என்ன நடந்தது ?

விடை.—ராமர் கொஞ்சகாலம் துக்கித்து விட்டு, லக்ஷ்மணர் மார்பிலிருந்த பாணத்தைப் பிடுங்கினார். உடனே அருகிலிருந்த ஹநுமார் முதலியவர்களை, லக்ஷ்மணருக்கு வேண்டிய சிகித்ஸைகளைச் செய்துகொண்டு ஜாக்கிரதையாய் இருக்கும்படி சொல்லிவிட்டு, ராவணனை அன்றைக்குள் வதம் செய்து விடுவதாகத் தீர்மானித்துக்கொண்டு, அவர் ராவணனை எதிர்த்தார். ராவண

ளுேடு வெகு காலம் யுத்தம் செய்துகொண்டிருக்கையில் லக்ஷ்மணர் ஸ்திதி அவருக்கு ஞாபகம் வர, மேல் யுத்தம் செய்ய ஓடாமல் லக்ஷ்மணர் அருகில் வந்து, அவர் இன்னும் எழுந்திராததைப் பற்றி ஸுஷேணனிடம் வெகுவாகப் பிரலாபிக்கத் தொடங்க உடனே ஸுஷேணன் ஹநுமாரை அழைத்து, முன் ஒருதரம் கொண்டு வந்த ஸஞ்சீவி பர்வதத்திலிருந்து இரண்டு மூன்று பச்சிலைகளைக் கொண்டுவரும்படி ஏவ ஹநுமார் அப்பொழுதே ஹிமாலயம் சென்று பச்சிலைகளைத் தேடிப் பார்த்தார். அவைகளைத் தம்மால் கண்டுபிடிக்க முடியாமற் போக, இரண்டாம் தரமும் ஸஞ்சீவி மலையையே ஹநுமார் இலங்கைக்குக் கொண்டுவந்துவிட்டார். அதிலிருந்த மூலிகைகள் இலைகள் முதலியவைகளால் ஸுஷேணன் லக்ஷ்மணரை ஸௌக்கியப்படுத்தினன்.

வினு 57.—லக்ஷ்மணர் எழுந்ததும் ராமரிடம் என்ன சொன்னர்? அப்பொழுது யார் ராமருக்கு என்ன செய்ய வந்தது?

விடை.—லக்ஷ்மணர் ராமரை நோக்கி 'எனக்காகத் தாங்கள் இவ்வளவு துக்கித்துக்கொண்டு தங்கள் பிரதிக்ஞையைப் பொய்யாக்கிக் கொள்வது நியாயமல்ல. ஆகையால் இன்று ஸூர்யாஸ்தமனத்திற்குள் தங்கள் சொற்படி ராவணனைக் கொல்லுவதற்கு வேண்டிய முயற்சியைச் செய்யுங்கள்' என்று தூண்ட, ராமர் ராவணனோடு சண்டைக்கு வந்து நின்றார். அப்பொழுது ராவணன் ரதத்திலும், ராமர் தரையிலும் நின்று சண்டையிடுவது நியாயமல்ல என்ற எண்ணம் இந்திரனுக்கு வர, அவன் தன் ஸாரதியாகிய மாதலியைத் தன் ரதத்தை ஓட்டிக்கொண்டுபோய் ராமருக்கு ஸஹாயம் செய்

யும்படி ஏவினான். உடனே இந்திரனது ரதம், ஆகாயத்திலிருந்து பூமியில் ராமர் முன்பாக இரங்க, மாதலி, தன் வரவின் நோக்கத்தை ராமருக்குத் தெரிவித்தான், உடனே ராமர், ரதத்தைப் பிரதக்ஷணம் செய்துவந்து ரதத்துள் ஏறி ராவணனோடு கோரயுத்தம் செய்யத் தொடங்கினார்.

வினா 58.—அப்பொழுது ராமருக்கும் ராவணனுக்கும் எவ்வாறு யுத்தம் நடந்தது?

விடை.—இருவரும் அஸ்திரங்களையும் மாற்று அஸ்திரங்களையும் ஓயாது வருஷிக்கத் தொடங்கினர். ராவணன் மாதலியையும், அவன தேர்குதிரைகளையும் வெகுவாகக் கஷ்டப்படுத்தினான். அஸுரர்கள் ராவணனையும், தேவர்கள் ராமரையும், உத்ஸாகப்படுத்திவிட்டனர். ராவணன் தன்னிடமிருந்த ஒரு மஹா சக்திவாய்ந்த ஆயுதத்தை ராமர்மேல் விட, அவர் அதை ஆகாயத்திலேயே அறுத்து எறிந்துவிட்டார். அது விழுந்த விடத்திலிருந்த வானரராக்ஷஸர்களுக்குள் அநேகர், உடனே மாண்டு விழுந்தனர். தனது பெரிய ஆயுதம் இவ்வாறு வீணானது கண்டு மிகுந்த கோபத்துடன் ராமரிடம் ராவணன் சண்டையிடத் தொடங்கினான். அப்பொழுது ராமர், அவன் ஸீதையைத் திருடிவந்த விஷயம் அவன் மனதில் நன்றாய்ப் படும்படி அவனைப் பழித்தார். இவ்வாறு இவர் பேசிக் கொண்டிருக்கையில், அஸ்திர தேவதைகள் எல்லாம் ராமர் முன் ரூபந்தரித்துத் தாஸர்களாக வந்து நின்றார்கள். இவ்வாறு ராமரது வில்லம்பாலும் சொல்லம்பாலும் அடிபட்ட ராவணன், தான் செய்த பாபம் தாங்கமுடியாது மூர்ச்சையை அடைந்தான். உடனே ராவணனது ஸாரதி,

தேரை யுத்தகளத்தை விட்டு ஓட்டிக்கொண்டு போய் விட்டான்.

வினு 59.—இவ்வாறு ராவணனது ரதம் போன தும், ராமருக்கு யார் எவ்வாறு ஸகாயம் செய்தனர்? பின்பு ராவணன் என்ன செய்தான்.

விடை.—அங்கு யுத்தத்தைப் பார்க்க வந்திருந்த அகஸ்திய மஹரிஷி, அப்பொழுது ராமரிடம் வந்து ஸூர்யனது ஸ்வரூபம், மேன்மை, ஆராதனைகள் அடங்கிய ஆதித்ய ஹ்ருதயம் என்ற மந்திரத்தை உபதேசம் செய்து அது யுத்தங்களில் ஜயத்தையும், ஆபத்துக்களி லிருந்து ஸுகமாய் வெளிவரும் திறமையையும் அளிக் கும் திறனுடையது என்று அதன் மகிமையைச் சொல்லிவிட்டு மறைந்தார். ராமர் ஆதித்ய ஹ்ருதயத் தால் ஸூர்யனைத் துதிக்க ஸூர்யன் ஜயம் வரும்படி ராமருக்கு அனுக்ரஹித்தான். இதற்குள் ராவணன் மூர்ச்சை தெளிந்து எழுந்து, தன்னை யுத்தகளத்தை விட்டுப் பின்னடையும்படி கொண்டு வந்த ஸாரதியைப் பலவாறு கோபத்தால் திட்ட, அவன் மறுபடி ராவண னது ரதத்தை ராமர் முன்பு கொண்டு வந்து நிறுத்தி னான்.

வினு 60.—அப்பொழுது நடந்த யுத்தம் எவ் வாறு முடிவு பெற்றது?

விடை.—ராவணன் ரதம் வருவதைக் கண்ட ராமர், மாதலியை உத்ஸாகப்படுத்த, அவன் இந்த ரதத்தை வெகு லாகவமாய் நடத்தத் தொடங்கினான். அப்பொ ழுது தன் முன்னிலையில் உண்டாகிய அபசகுனங்களை யும் அன்று அமாவாசை என்பதையும் கவனியாது,

ராவணன் காலகதிக்கு உட்பட்டவனாய் ராமரோடு வெகுகாலம் விசித்திர யுத்தம் செய்துவந்தான். அப்பொழுது இருபக்கத்திலும் அநேகர் மாண்டனர். தேர் குதிரைகள் த்வஜங்கள் கணக்கின்றி நஷ்டமாயின. மாதலிக்கும் ராமருக்கும் இந்த யுத்தத்தில் பட்ட அடிகளுக்குக் கணக்கே இல்லை. ராமராவண யுத்தமானது ராமராவணயுத்தம் போன்றே இருந்ததாம். அதாவது இந்த யுத்தத்திற்கு ஸமமாகவாவது, அல்லது இதைவிட உயர்வாகவாவது வேறு ஒரு யுத்தத்தையும் சொல்ல முடியாது என்பதே. அந்த யுத்தத்தில் ராமர் அநேகம் தரம், மாரீசன், விராதன், கரதூஷணர்கள், வாலி இவர்களை ஒரே தரத்தில் ஸம்ஹரித்த அம்பால், ராவணனது தலையை வெட்டித் தள்ளினார். அப்படித் தள்ளியும் அவன் தலை முளைத்துக்கொண்டே வந்தது. இதைக்கண்டு வியப்படைந்து, ராமர் ராவணனோடு கோரயுத்தம் செய்து வருகையில், மாதலி, இந்திரனால் அகஸ்தியருக்குக் கொடுக்கப்பட்டு அவரால் வனத்தில் ராமருக்குக் கொடுக்கப்பட்டிருந்த அவரது அம்பறாத்தூணியிலிருக்கும் பிரம்மாஸ்திர விசேஷத்தின் வைபவம் ராமருக்கு நினைப்பு வரும்படி ஞாபகப்படுத்த, ராவணனுக்குச் சாகுங்காலம் வந்துவிட்டதை அறிந்தவராய் ராமர் அந்தத் திவ்ய அஸ்திரத்தை எடுத்து, பூஜை முதலியவைகளால் அதை ஆராதித்து வேதமந்திரங்கள் மூலமாய் அதை ராவணனது மார்பின்மேல் விழும்படி குறிவைத்து விட, அது வந்து விழுந்து ராவணனது மார்பிலிருந்த அமிருத கலசம்போன்ற உயிர்நிலையைப் பிளந்து அவனைக் கொன்று கீழே தள்ளிவிட்டு ராமரது அம்பறாத்தூணியில் வந்து புகுந்து கொண்டது.

வினு 61.—இவ்வாறு ராவணன் ராமரால் இறந்ததும், யுத்தகளத்தில் என்ன நடந்தது?

விடை.—ராவணன் அடிபட்டு விழுந்ததும், விபீஷணருக்கு அடங்காத் துக்கம் வந்து விட்டது. தாம் சொல்லிய பேச்சைக் கேட்டு புத்திவாராது இவ்வாறு தமது தமயன் இறக்கும்படி நேரிட்டதே என்று எண்ணியெண்ணி விபீஷணர் மனம் உருகினுர். இதற்குள் தனது கணவன் இறந்து விட்டான் என்ற ஸங்கதி கேள்வியுற்று மண்டோதரியும், ராவணனது மற்றைய ஸ்திரீகளும் யுத்தகளம் வந்து வெகுவாகப் பிரலாபிக்கத் தொடங்கினுர்கள். ராமருக்கும் யுத்தாவேசம் தணிய, தமது மனத்தில் ராவணனிடம் இருந்த விரோதம் எல்லாம் போய்விட்டது. உடனே விபீஷணரை அழைத்து, சிறந்த அரசர்கள் யுத்தத்திலிறந்தால், இவ்வாறு துக்கிக்கலாகாது என்று புத்திமதி கூறி ராவணனுக்குத் தகுந்தபடி ஈமக்கடன்களைச் செய்யும்படி ஏவினுர். 'கொடியவனுக்குக் கர்மம் செய்யவேண்டுவதில்லை' என்ற விபீஷணருக்கு ராமர், 'இறந்தபின்பு கொடியவனுக்கும் நல்லவனுக்கும் அதிக வித்தியாஸமில்லை. ஒருவன் மேலிருக்கும் கோபம், விரோதம் முதலியவைகள் அவன் இறக்கும் மட்டும் இருக்கவேண்டுமே ஒழிய, அதன் பின்புகூட அவைகளைப் பாராட்டுவது நல்லவருக்கு அழகன்று,' என்று புத்திமதி கூற, விபீஷணர் விதிப்படி ராவணனது பிணத்திற்குச் செய்யவேண்டிய கடன்களைச் செய்து முடித்தார்.

வினு 62.—இவ்வாறு ராவணனுக்குக் கர்மம் செய்து முடிந்தவுடன் என்ன நடந்தது? பின்பு ராமர் என்ன செய்தார்?

விடை.—யுத்த வெறி யடங்கி, ராமர் முன்போல் ஸாத்மீக நிலையை அடைந்தார். இந்நிலையில், ராமரைத் தேவதைகள் முதலியவர்கள் தரிசித்துவிட்டு, ராமபராக்கிரமம், வானர யுத்தம், ஸுக்ரீவனது ஸ்நேகம், ஹனுமாரது சிறப்பு, லக்ஷ்மணர் ஸீதை இவர்களது பக்தி முதலியவைகளைப்பற்றி வெகு உத்ஸாகத்தோடு பேசிக் கொண்டு, தங்கள் இருப்பிடம் சென்றார்கள். உடனே ராமர் இந்திர ரதத்தைக்கொண்டுபோகும்படி மாதலிக்கு உத்தரவு செய்ய, அவன் இந்திரலோகம் நோக்கிச்சென்றான். அதன் பின்பு ஸுக்ரீவன் முதலிய வானரர்கள் ஸகாயத்தால், நான்கு ஸமுத்திர ஜலங்களும் லங்கைக்கு வந்து சேரும்படி செய்து, விபீஷணரை லங்கை அரசனாக் ராமர் பட்டாபிஷேகம் செய்வித்தார். இவ்வளவு காரியங்களும் ஒழுங்காய் முடிந்ததும், ராமர் ஹனுமாரை அழைத்து, விபீஷணரது அனுமதியின் பேரில், ஸீதையைக் கண்டு யுத்த விஷயங்களைச் சொல்லி வரும்படி ஏவினார்.

வினு 63.—ஹனுமார் ஸீதையிடம் சென்று என்ன செய்தார்? பின்பு ஸீதையை ராமர் காணும் விஷயத்தில் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டன?

விடை.—விபீஷணரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு மிகுந்த துக்கத்தோடு அசோகவனத்திலிருக்கும் ஸீதையிடம், ஹனுமார் சென்றார். இவரைக் கண்டதும் முதலில் ஸீதைக்குப் பயம் உண்டான போதிலும், பின்பு இவர் முன் வந்த தூதர் என்ற எண்ணம் வர, ஸீதை ஸந்தோஷத்தோடு ஹனுமார் சொல்வதைக் கேட்டாள். அப்பொழுது ஹனுமார், ராமர் ராவணனை வதம் செய்துவிட்டார் என்றும், தர்மாத்மா

வான விபீஷணரே இலங்காதிபதியாய் விட்டார் என்றும் சொல்லி, ராவணனது உத்தரவின்படி ஸீதையைக் கஷ்டப்படுத்திய ராக்ஷஸிகளைக் கொன்று எறியும்படி தமக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்று ஸீதையைக் கேட்டார். ஸீதை தர்மசிந்தையுடையவளாகையால் இதற்கு இசையாது, "ராக்ஷஸிகள் ராவணன் உத்தரவுக்கு உட்பட்டு அவ்வாறு கஷ்டப் படுத்தினர்களே ஒழியத் தாங்களாக அவ்வாறு செய்யவில்லை. ஆகையால் ராக்ஷஸிகளைக் கொல்லுவதால் ஒரு பிரயோஜனமுமில்லை. இனிமேல் அவர்கள் நல்லவர்களாய் விடுவார்கள். மேலும் தெரியாதவர்கள் பிறரால் ஏவப்பட்டுப் பாபத்தொழில்களைச் செய்யலாம். அவ்வாறு அவர்கள் செய்வதற்குத் தெரிந்தவர்கள் பதில் பாபம் செய்து அவர்களை வருத்துவது நியாயமன்று" என்று சொல்லி ராக்ஷஸிகளைப் பாதுகாத்தாள். கடைசியாகத் தன் கணவனைச் சீக்கிரம் பார்க்கவேண்டும் என்ற ஆவல் தனக்கு இருப்பதாக, ஹனுமார் மூலமாய் ராமருக்கு ஸீதை சொல்லியனுப்பினள். ராமர் இந்தச்சங்கதியை ஹனுமாரிடமிருந்து கேட்டவுடன், ஸீதையை சுத்த ஜலத்தில் ஸ்நானம் செய்வித்து ஆடையாபரணங்களை அணியும்படி செய்வித்துத் தம்மிடம் கொண்டுவந்து விடும்படி விபீஷணருக்கு உத்தரவு கொடுத்தார். விபீஷணரும் அவ்வாறே ஸீதைக்கு அலங்காரங்கள் செய்விக்கச்சொல்லி ஒரு சிவிகையில் ஏற்றிக்கொண்டு ராமர் அருகில் வந்தார்.

வினா 64.—இவ்வாறு வெகு உத்ஸாகத்தோடு ஸீதை ராமர் ஸமீபம் வந்ததும், என்ன விபரீதம் ஸம்பவித்தது?

விடை.—ஸீதை இருந்த சிவிகை ராமர் அருகில் வந்த உடன், அந்தச் சிவிகையைத் தமது ஸமீபம் கொண்டு வரும்படி அவர் விபீஷணரை ஏவினார். அப்பொழுது சிவிகையைக் காத்துக்கொண்டு வந்த ராக்ஷஸர், அங்கு கூட்டமாய் இருந்த வானரர்களை அடித்து ஓட்டத்தொடங்க, ராமருக்குக் கோபம் வந்துவிட்டது. 'என் ஸ்நேகிதர்களான வானரர்களை இவ்வாறு கஷ்டப் படுத்தி என்னை அவமானப் படுத்தாதேயுங்கள். ஸீதையை இறங்கி என்னிடம் வரும்படி செய்யுங்கள். ஆபத் காலத்தில் பலர்முன் வருவதால், ஸ்திரீகளுக்கு அவமானமில்லை' என்று அவர் உறுதியான உத்தரவு கொடுத்தார். இந்த உத்தரவைக் கேட்டவுடன், ஸதா கணவன் சொற்படி நடக்கும் ஸீதையானவள், சிவிகையை விட்டு இறங்கித் தலை குனிந்துகொண்டு, மிகுந்த வெட்கத்துடன் விபீஷணரை முன்னிட்டுக்கொண்டு, ராமர் ஸமீபம் வந்து நின்றாள். ராமர் ஒன்றும் பேசாது சற்றுநேரம் மௌனமாய் இருந்துவிட்டு, ஸீதையை நோக்கி 'உன் விஷயத்தில் நான் அவசியம் செய்ய வேண்டியவைகளைச் செய்து என் ஆண்மையை நிலை நிறுத்தியாய் விட்டது. ஆனால் இப்பொழுது மாத்திரம், கேவலம் ஆசையால் உன்னை என் பெண்சாதியாக அங்கீகரிக்க, எனக்கு மனம் வரவில்லை. நீ ராவணனால் தொட்டு எடுக்கப்பட்டு அவன் வீட்டிலேயே இவ்வளவு காலம் இருந்து விட்டாய். நீ பரிசுத்தையாய்த் தான் இருக்கிறாய் என்று, பலர் அறியும்படியாக நிரூபணம் செய்தால் ஒழிய, நான் உன்னை அங்கீகரிக்க மாட்டேன். அவ்வாறு நான் செய்துவிட்டால், என்னைப் போலவே அனேகர் செய்ய, உலகத்தில் ஜாதி கலப்பு

ஏற்பட்டு அபிப்ராயங்கள் விருத்தியாகும். ஆகையால் நீ, லக்ஷ்மணர், பரதர், ஸுக்ரீவன், விபீஷணர் ஆகிய இவர்களில் யாருடைய வீட்டிலாவது இருக்கலாம். சீக்கிரம் தீர்மானம் செய்து அவ்வாறே செய். நான் எந்த உத்தேசத்தோடு லங்கைக்கு வந்தேனோ, அது பூர்த்தியாய் விட்டது' என்று இக்கொடிய வார்த்தைகளைச் சொன்னார்.

வினா 65.—கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போக, தனக்கு வந்த ஆபத்காலத்தில் ஸீதை எவ்வாறு நடந்து கொண்டாள்?

விடை.—ஸீதை ராமனை நோக்கி, 'ஏதோ துன்மார்க்க ஸ்திரீகளைப்பற்றிக் கேட்டுவிட்டு, நானும் அவ்வாறிருக்க வேண்டும் என்று என் ஸந்தேகிக்கவேண்டும். நான் கேவலம் ஸ்திரீயாகையால், ராவணன் தேகத்தை என் எண்ணத்திற்கு விரோதமாய்த் தொடவேண்டி வந்தது. நான் மனதார ராவணனை ஒருபோதும் விரும்பவில்லை. எனது நிலைமை ஹனுமார் மூலமாய்த் தெரிந்து கொண்டிருந்தும், நீர் ஏன் இம்மாதிரி ஸந்தேகிக்க வேண்டும். நீர் லங்கைக்கு வருவதின் நோக்கம் இன்னது என்பதை முன்னமே ஹனுமார் மூலமாய் எனக்குத் தெரிவித்திருந்தீராயின், நான் அப்பொழுதே என் உயிரை விட்டிருப்பேனே. எனக்காக இவ்வளவு வானரர்கள் இறக்கும்படியாயும், தாங்கள் இவ்வளவு கஷ்டப் படும்படியாயும் நேர்ந்திராதே. இப்பொழுதும் ஒன்றும் எனக்குக் குறைவில்லை' என்று தன் கணவனை நோக்கிச் சொல்லிவிட்டு, லக்ஷ்மணரை நோக்கி, 'ஐயா எனக்கு ஒரு அக்னியை வளர்த்துக்கொடும், நான் என்

நாதனைவிட்டு ஒருநாளும் உயிர் தரியேன். என் நாதன் என்னை நிராகரித்த பின்பு, எனக்கு உலகில் வேறு என்ன இருக்கிறது,' என்று சொன்னாள். இதைக் கேட்ட உடன், லக்ஷ்மணர் வெகு துக்கத்தோடு ராமனை நோக்க, அவரும், தீ வளர்த்துக் கொடுக்கும்படி கண் சாடை காட்டினார். அப்பொழுது லக்ஷ்மணர் தீயை வளர்க்க, ஸீதை, ராமரையும் அக்னியையும் வலம் வந்து, 'ஏ அக்னி பகவானே, நீயே என் பரிசுத்த நிலைக்குச் சாக்ஷி, கணவனால் நிராகரிக்கப்பட்ட எனக்கு நீயே கதி' என்று உரக்கச் சொல்லிக்கொண்டு தீயில் மூழ்கினாள். வானரர்களும் ராக்ஷஸர்களும் துக்கம் பொறுக்கமுடியாது அலறினார்கள்.

வினா 66.—இவ்வாறு நிர்ப்பயமாய் ஸீதை தீயில் மூழ்கியபின், என்ன விசேஷம் நடந்தது?

விடை.—ராமர் மனம் கொஞ்சம் அலைந்திருந்த அத்தருணத்தில், வானரர்கள், ராக்ஷஸர்கள் முதலியவர்களது துக்க சப்தமானது அவரது மனதைக் குழம்பும்படி செய்தது. அத்தருணத்தில் பிரம்மா முதலியவர்கள் வந்து ராமரைத் துதித்து, அவரது உண்மையான விஷ்ணு ரூபமும், ஸீதையின் உண்மையான லக்ஷ்மி ரூபமும் அவருக்கு ஞாபகம் வரும்படி செய்தனர். இவ்வாறு பிரமா துதித்துக்கொண்டிருக்கையில், அக்னி பகவான் ஜகஜ்ஜோதியாய் பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஸீதையை மடியில் உட்கார வைத்துக்கொண்டு எரியும் தீயிலிருந்து வெளிவந்து ஸீதையின் சுத்த நிலையையும் அவளது உறுதியையும் பலர் அறிய வெளியிட்டு, ஸீதையை ராமரது பாதத்தில் ஸமர்ப்பிக்க, ராமர் ஸீதை

யை வெகு ஸந்தோஷத்தோடு அங்கீகரித்துக் கொண்டார்.

வினு 67.—இவ்வாறு ஸீதையும் ராமரும் சேர்ந்ததை நோக்கி யாவரும் ஆனந்தித்துக்கொண்டிருக்கையில் அங்கு யார் இவர்கள் கண்ணுக்குத் தோன்றி என்ன செய்தார்கள்?

விடை.—பரமசிவன் தசரதரை அழைத்துக்கொண்டுவந்து, ராமர் முதலியவர்கள் கண்முன் தோன்றி, சீக்கிரம் அயோத்திக்குப் போய், அவர் வரவை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு வருந்தும் பரதர், கௌஸல்யை முதலியவர்களைத் தேற்றும்படி ராமருக்குச் சொல்லி, தசரதரையும், ராமலக்ஷ்மண ஸீதை முதலியவர்களுக்குக் காட்டினர். அப்பொழுது எல்லோரும், பெரியவராகிய தசரதருக்குத் தகுந்த வந்தனை வழிபாடுகள் செய்ய, தசரதர் அவர்களை வாழ்த்தி, ராமர் முதலில் அங்கீகரிக்காமலிருந்ததனால் ஸீதைக்கு உண்டாயிருந்த கோபத்தை 'இவ்வாறு ராமர் செய்யாவிடில் உன் மஹிமையை *உலகத்தார் எவ்வாறறிவர்?' என்று சொல்லித் தேற்றினர். பின்பு ராமரின் வேண்டுகோளின்படி, கைகேயியின்மேலிருந்த கோபத்தைத் தசரதர்விட்டு லக்ஷ்மணரை ஸதா ராமருக்குத் தவறாது தொண்டு செய்து வரும்படி சொல்லி, பரமசிவனோடு தசரதர் தேவலோகம் சென்றனர்.

வினு 68.—தசரதர் தேவலோகம் சென்றதும் யார் ராமரைப் பார்க்கவந்து என்ன செய்தார்?

விடை.—தேவேந்திரன் ராமரைப் பார்க்க வந்து, அவரை ஏதாவது வரங்கேட்டுக்கொள்ளும்படி சொல்ல,

அவர் 'எனக்காக உயிரைக் கவனியாது சண்டையிட்டு யுத்தகளத்தில் மாண்ட வானரர்கள் யாவரும் பிழைத்தெழவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். அதன்படியே இந்திரன் அனுக்ரஹிக்க, இறந்த வானரர்களில் ஒருவர் கூட பாக்கி இன்றிப் பிழைத்தெழுந்தனர்.

வின 69.—மறுநாட் காலையில் ராமர் என்ன செய்தார்?

விடை.—வானரர்கள் எல்லோரையும் ஸ்நானுதிகள் செய்யச் சொல்லிவிட்டு, தான் அயோத்திபோய் எல்லாம் செய்துகொள்ளுவதாகச் சொல்லிப் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யச் சொன்னார். அப்பொழுது விபீஷணர், தமது தமையன் குபேரனிடமிருந்து பிடுங்கிவந்த புஷ்பகவிமானம் தம்மிடம் இருப்பதாகவும், அதனால் சீக்கிரம் அயோத்தியைச் சேரலாம் என்பதாகவும், ஆகையால் லங்கையில் ஒரு நாள் இருந்து, தாம் செய்யும் பூஜைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதாகவும் பிரார்த்தித்தார். ராமர் தாம் சீக்கிரம் அயோத்திபோய் பரதர் முதலியோரைத் தேற்ற வேண்டியது அவசியம் என்றும், விபீஷணர் அதுவரை மனதார செய்த உதவிகளே தமக்குத் தகுந்த பூஜையாகையால் வேறு பூஜை தமக்கு அவசியமில்லை என்றும் எடுத்துரைத்தார். இதைக்கேட்டதும், விபீஷணர் புஷ்பகத்தை ராமரிடம் கொண்டுவந்து நிறுத்த, ஸீதை ராமர் லக்ஷ்மணர் மூவரும் அதில் ஏறி, வானர ராக்ஷஸர்களிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட யத்தனிக்கையில் அவர்கள் தாமும் அயோத்யை வந்து ராமர் பட்டாபிஷேகக் காட்சியைக் கண்டு களிக்கவேண்டும் என்று